விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ



சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை (11.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327


## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க ஆதரவு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பு முன்னெடுத்து வரும் போராட்டத்திற்கு, தனது முழுமையான ஆதரவு வழங்கப் படும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க அறிவித்துள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவை ஆதரிக்கும் அழைப்பை த.தே.கூட்டமைப்பு ஆழமாக பரிசீலிக்கும்

### தீர்க்கமான முடிபு எடுப்போம் – சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரசுத் தரப்பு வேட்பாளரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை ஆழமாகப் பரிசீலிக்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

தங்களை இதுவரை தமிழ்த தேசியக் கூட்டமைப்பு ஆதரித்துச் செயற்படவில்லை என்றும் இம்முறையாவது தங்களை ஆதரிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும் என்றும் அரசின சிரேஷ்ட அமைச்சரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் அவரது சகோதரருமான பஷில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார் என்று கொழும்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது பற்றிக் கேட்டபோதே அத்தகைய கோரிக்கையை ஆழமாகப் பரிசீலிக்கத் தயார் என இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, நாங்கள் இதுவரை அரசுடன் ஒத்துழைத்துச் செயற்பட முன்வரவில்லை என்று அரசுத் தரப்பில் கூறப்படுவது தவறானது.

எமது மக்களின் பிரச்சினை

20 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலில் மகிந்த போட்டியிட முடியுமா?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாக தேர்தலில் போட்டியிட முடியுமா, முடியாதா என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நேற்று மாலை அலரி மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் ஆதரவாகவும் எதிராகவும் 38 விரிவுரை மனுக்கள் தாக்கல் செய்யப்

02 ஆம் பக்கம் பார்க்க

## ம.மக்கள் முன்னணி மகிந்தவுக்கு ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக அவருக்கு ஆதரவை வழங்க போவதாக மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த அந்த கட்சியின் தலைவர்கள் இதனை கூறியுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு குறிப்பிடுகின்றது.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவரும்

20 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியா தலையிடாது இனப்பிரச்சினை தீராது

## சென்னையில் விக்னேஸ்வரன் பேட்டி

(கொழும்பு)


**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்டால்தான் நிரந்தர தீர்வுகாண முடியும் என வட மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கடந்த 7-ந் திகதி சென்னைக்கு விஜயம் செய்த விக்னேஸ்வரன், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

நேற்று காலை சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரில் பாதிக்கப பட்ட 18 ஆயிரம் பேரும், ஒரு லட்சம

20 ஆம் பக்கம் பார்க்க



## இந்திய சிறைக்கு மீனவர்கள் மாற்றம்!

(சென்னை)

இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் விரைவில் இந்தியாவிலுள்ள சிறைகளுக்கு மாற்றப்படுவார்கள் என்று சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று மாலை தனது டுவிட்டர் வலைத்தளம் ஊடாக அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க



யாழ்.பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்றுக் காலை ஆரம்பமானது. நிகழ்வில் பல்கலைக்கழக வேந்தர், உபவேந்தர் மற்றும் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் தமிழ் கலாசார முறைப்படி அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

## பொருத்தமான முறையில் இலங்கைக்கு கண்டனம்

### அமெரிக்க பிரதிநிதி வரவேற்பு

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் இலங்கை அரசாங்கத்துக்கு பொருத்தமான முறையில் கண்டனம் தெரிவித்துள்ளதாக ஜெனிவாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹாப்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் குறித்து விசாரிக்கும் ஐ.நா விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை அச்சுறுத்தி, விசாரணைகளை சீர்குலைக்க இலங்கை அரசாங்கம் முயன்று வருவதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் கடந்த வாரம் குற்றம் சுமத்தியிருந்தார்

இந்த போர்க்குற்றங்கள் மற்றும மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவால் நடத்தப்படும் விசாரணைகளின் நம்பகத்தன்மை மற்றும் நேர்மை ஆகியவற்றின் மீது இல

20 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## அடைக்கலம் செபமாலை (பட்டுப்பிள்ளை)



குருநகரைப் பிறப்பிடமாகவும் 93, 2ஆம் குறுக்கு பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அடைக்கலம் செபமாலை நேற்று (10.11.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசை-பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சவிரியான் அக்கினேஸ் தம்பதிகளின் அன்பு மருமகளும், அடைக்கலத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மோகன் மற்றும் மஞ்சு, தேவி, அந்தோனி, சுரேஸ், சூரியா, யசிந்தா, றெஜினா, யூசெற், சுமன், சுஜிதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திலகன், கமிலஸ், அன்பரசி, சூட்டி, அகிலா, சறோஜினி, காலஞ்சென்ற பொபி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான யோண், சின்னப்பிள்ளை, வவா மற்றும் அன்ரன், சின்னக்கிளி, பொங்கிளி, பச்சைக்கிளி ஆகியோரின் அன்பு சகோதரியும், றுபினா, றுபின்சன், அபித்தா, அனுஜன், சின்னவன், அபி, அஜய், கொலஸ்ரிக்கா, சுபன், சுபிதா, சுமித்திரா, சுரேக்கா, பிரசாத், பொபிதா, சுயித்தா, அஸ்வின், சுகிர்தா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு இன்று (11.11.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

93, 2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

(சி-9032)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



10.11.2014 57-வது அகவை காணும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு எமது பிறந்த தின வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்வதோடு எமது கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்துகளுக்கு வழி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியாது இருந்த போது அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தில் எமது பேருந்துகளுக்கான வழி அனுமதியை பதிவு செய்து வழி அனுமதிப் பத்திரங்களை பெற்றுத் தந்தமைக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் இவ்வேளையில் நாம் தெரிவித்து கொள்கின்றோம்.

உரிமையாளர்கள்,
சாரதிகள், நடத்துநர்கள், பணியாளர்கள்

தனியார் பேருந்தின் உத்தரவாதம்
வரையறுக்கப்பட்ட நிறுவனம்
கிளிநொச்சி மாவட்டம்

(சி-9028)

# மகிந்தவை...

ழைத்துச் செயற்படவில்லை என்று கூறுவது முற்றிலும் தவறானது. இப்போது ஜனாதிபதித் தேர்தலில் எமது ஒத்துழைப்பைக் கோருவது பற்றிய தகவலை ஊடகங்கள் மூலமாகவே நாம் அறிகிறோம். உத்தியோகபூர்வமாக அத்தகைய அழைப்பு ஏதும் எமக்கு விடுக்கப்படவில்லை. எனினும் அப்படி ஓர் அழைப்பு விடுக்கப்பட்டால் நாம் அதனை ஒரேயடியாக நிராகரித்துவிட மாட்டோம். முதலில் தேர்தல் அறிவிக்கப்படட்டும். அதன்பின்னர் இத்தகைய அழைப்பு விடுக்கப்பட்டால் நாம் அதனை ஆழமாக பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம். நடுநிலை மனதுடன் அத்தகைய கோரிக்கையின் சாதக பாதகங்களை ஆராய்ந்து நாம் ஒரு தீர்க்கமாக முடிவை எடுப்போம் - என்றார் இரா.சம்பந்தன் எம்.பி. (செ-11)

# தேர்தலில் மகிந்த...

பட்டிருந்தன. பிரதம நீதியரசர் மொஹான பீரிஸ், கே. ஸ்ரீபன், சந்திரா ஏக்கநாயக்க, ஈவா வனசுந்தர, ரோஹினி மாரசிங்க, புவனேக அலுவிஹார, சிசிர டி ஆப்ரு, பிரியந்த ஜயவர்தன ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் ஜனாதிபதி மகிந்த அனுப்பிய விளக்க கோரிக்கை ஆராயப்பட்டது.

இந்த நீதியரசர் குழுவில் வெளிநாடு சென்றிருந்த சலீம் மர்சூக் மாத்திரமே இடம்பெறவில்லை.

பிரதமர் டி.எம். ஜயரத்ன, கோமின் தயாசிறி, க்ஷனிகா ஹிரிபுரேகம, ஜே.சி. வெலியமுன, பேராசிரியர் சுதந்த லியனகே, பேராசிரியர் சம்பத் பண்டார, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, சுனில் வட்டகல, ஊடகவியலாளர் கே.டப்ளியூ. ஜனரஞ்சன, கலாநிதி என்.எல்.கே. கருணாரத்ன, ஆகியோர் உள்ளிட்ட 38 பேர் எழுத்து மூலமான வாதங்களை முன்வைத்திருந்தனர். (செ-11)


## வேலைவாய்ப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி

நீங்கள் எதிர்பார்ப்பது கௌரவமான நிரந்தர தொழிலா? உங்கள் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய மாதாந்தம் ரூபா 60000.00 உழைத்து எதிர்கால வாழ்வை சிறப்பாக அமைத்துக்கொள்ள அருமையான தொழில்வாய்ப்பு (Excutive)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் துறையில் அக்கறையுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்களும் நிரந்தர (தொழில்) வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் 18-30 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

0777274795/ 0215686466

73, St.Annes Church Road, Chundikuly-Jaffna.

(சி-9029)

DHL விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை!!! THIRUMURUGEN COM NET (PVT) LTD.

DHL இன் நேரடி அங்கீகாரம் பெற்ற ஒரே முகவராக விளங்கும்

## திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd.

தற்பொழுது உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவையினை மூன்று வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

Delivery 3 working days

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் புத்தகக்கடைக்கு முன்பாக)

T.P: 0212227835 / 0777554528

(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)

(7859)

## தேவை

முன் அனுபவமுள்ள மொத்த விற்பனை முகவர்களும் விற்பனை பிரதிநிதிகளும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

SPEED
PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C-9016)


யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

# பிறந்தநாள் வாழ்த்து - 10.11.2014



ஏழை பங்காளனே!

"எங்களின் நலன் காத்த பெருந்தகையே எங்களின் வாழ்த்தையும் ஏற்றுக் கொள்ளும்"

## கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

ஓட்டோ உரிமையாளர் வளம் பெருக
ஓட்டோ சங்கம் வளர்ந்திட
நிலையான இடம் தந்தீர்
தங்கள் தோழர்களும் எமக்குதவ
பேருதவி புரிந்தீரே மறக்க முடியுமா?
அன்றாடத் தேவையென்று அனைவருக்கும்
அள்ளிக் கொடுத்தீரே தங்களின்
அகவை 57-ஐ நாமும்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழிய வாழிய நீடூழி வாழியவே.

வாழ்த்துவோர்
யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்(தலைமையகம்)
இல.40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

(c-9026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்துமா மன்றத்தின் அனுதாபச் செய்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் சமஸ்கிருத விரிவுரையாளரு மாகிய விநாயகமூர்த்தி சிவசாமி 08.11.2014 அன்று இறைபதம் எய்தியதை அறிந்து அகில இலங்கை இந்துமா மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் தெரிவிக்கின்றது.


அமரர் விநாயகமூர்த்தி சிவசாமி பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைக ளுடன் தனது சேவையை மட்டுப்படுத்தாது சமய மற்றும் சமூக மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றிய பெருமகனா வார்.

சமஸ்கிருதம், வரலாறு, தமிழ், இந்துப்பண்பாடு, நுண்கலைகள் எனப்பல துறைகளில் ஆளுமை பெற்றிருந்தார். இவை தொடர்பாக பல அரிய நூல்களை ஆக்கியுள்ளதோடு அகில இலங்கை இந்துமா மன்றத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார். எமது சமயக்கருத்தரங்குக ளிலும் மாநாடுகளிலும் கலந்து கொண்ட துடன் சமயம் சம்பந்தமான நடவடிக்கைக ளுக்கு எந்நேரமும் ஒத்துழைப்பை வழங்கி யவராவார்.

இந்துமா மன்றத்துடன் நெருங்கிய உறவைப் பேணிவந்த அமரர் சிவசாமி எமக்கு ஏற்படும் ஐயங்களையும், பிரச்சினை களையும் தீர்ப்பதோடு அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கி வந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள முடியாமைக்கு வருத்தம் தெரிவிப்பதோடு அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாரின் துயரில் பங்குகொண்டு அவர் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டி நிற்கின்றோம் என இந்து மா மன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நினைவுக் கண்ணீர்க் காணிக்கை



(அ-9027)

## அமரர் "விகடகவி" முத்தையா திருநாவுக்கரசு அவர்கள்

(ஓய்வு பெற்ற நீதிபதி)

**அன்பின் ஊற்றாய் அமைதியின் பிறப்பிடமாய்**
**விகடமொழி பேசி சிரிக்க வைப்பீரே!**
**இன்ப வாழ்வில் எமக்கு நல்வழி காட்டினீர்!**
**ஈகையின் பெறுமதி மொழிந்த கவிஞரே!**
**நீதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்வில்**
**எம்முடன் பழகிய நாட்கள் எத்தனை?**
**சோதி மயமான இறைவனுடன் இணைந்து**
**ஒளி வீசப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது நிறுவன வளர்ச்சிக்கு வழிகாட்டியாயிருந்த
அவரது ஆத்மா எல்லாம் வல்ல கைலாசபிள்ளையாரின்
திருவடி நிழலில் அமைதி பெறப் பிரார்த்திப்பதோடு,
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல. 527, நாவலர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**ஸ்தாபகர், பணிப்பாளர், பணியாளர்கள்**
**தியாகி அறக்கொடை நிறுவனம்.**

# இராசி பலன்

11.11.2014

(ஐப்பசி 25, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை- 6.00 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 5.11 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 7.11 மணிவரை
இராகுகாலம் 3.06-4.36 மணிவரை
சுபநேரம் 10.36-12.06 மணிவரை

வளவன்

**மீனம்** – எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பயணங்கள் கைகூடும்.

**மேடம்** – வெற்றிகரமான செய்திகள் வீடு வந்து சேரும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், முயற்சிகள் எளிதில் கைகூடும், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**இடபம்** – புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** – வழிபாட்டால் பெருமைகாண வேண்டிய நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், பெரியோர் சந்திப்புண்டு.

**கும்பம்** – சுப செய்திகள் வந்து சேரும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்** – நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்** – உறவினர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிம்மம்** – புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, உறவினர்கள் வீடு தேடிவரலாம், பொன்னான நாள்.

**தனுசு** – குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வியாபார விருத்தியுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** – வரவும் செலவும் சமமாகும் நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், பிரயாண பயணங்களில் [illegible] அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்** – பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், பயணங்களால் ஆதாயமுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**கன்னி** – கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்திப் பொருட்களில் மலத்தொற்று காணப்படுவதாகக் கூறி மூடப்பட்டுள்ள தமது வியாபார நிலையங்களை மீளவும் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி யாழ்.மாவட்ட உப உணவு மற்றும் குளிர்பான உற்பத்தியாளர் சங்கம் மற்றும் வியாபாரிகளால் ஆர்ப்பாட்டமொன்று நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ். நகரில் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்ட முடிவில் ஆர்ப்பாட்டகாரர்கள் தமது கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம் எடுக்க வேண்டும் எனக் கோரி ஈ.பி.டி.பி யின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரனிடம் மகஜர் கையளித்தனர்.

# தேசியமட்ட கலாசார போட்டியில் வெற்றியீட்டியோர் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்ட கலாசாரப் போட்டிகள் கடந்த வாரம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரன் தலைமையில் இடம்பெற்றன.

இதில் கிராமியப் பாடல், ஆங்கில அறிவிப்பாளர், இளம்பாடகர், தமிழ் அறிவிப்பாளர், கிராமிய நடனம், அபிநய நடிப்பு, தனிநடனம், தமிழ் பேச்சு உள்ளிட்ட போட்டிகள் இடம்பெற்றன.

இப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியோர் விபரங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய கிராமியப் பாடல் நிகழ்வில் முதலாம் இடம் எ.லக்ஷ்மி (வேலணைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), இரண்டாம் இடம் க.யோகேஷ்வரன் (நெடுந்தீவு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), மூன்றாமிடம் ஆ.அமிர்தா (காரை நகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளம்).

ஆங்கில அறிவிப்பாளர் போட்டியில் முதலாம் இடம் ஜெ.பி.மரயா (சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), இரண்டாம் இடம இ.வினு (யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), மூன்றா மிடம் வி.யோன் கலிஷஸ் (யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்).

இளம்பாடகருக்கான போட்டியில் முதலாம் இடம் ம.தயாபரன் (ஊரகாவற்றுறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), இரண்டாமிடம் க.யோகேஷ்வரன் (நெடுந்தீவு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), மூன்றாமிடம் வி.வித் தியாதாரணி (உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளம்).

தமிழ் அறிவிப்பாளருக்கான போட்டியில் முதலாம் இடம் சாள்ஸ் (யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), இரண்டாமிடம் வி.கிறிஷ்டியன் (உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), மூன்றாமிடம் த.சேயோன் கர வெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்).


கிராமிய நடனப் போட்டியில் முதலாம் இடம் நர்த்தன ஷேத்திரா நடனக் குழு (உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), இரண்டாமிடம் (இணுவில் மத்திய கல்லூரி நடனக் குழு உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), மூன்றாமிடம் நிக்ஷலா நடனக் குழு (நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்,).

அபிநய நடிப்பு போட்டியில் முதலாம இடம் அ.சுஜிந்திரன் (தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), இரண்டாமிடம் வி.வானதி (உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்) மூன்றாமிடம் ச.வேணுகானன் (சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம மேளனம்).

தனிநடனம் போட்டியில் முதலாம் இடம் ஜெ.ஆதித்தியா (உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளம்), இரண்டாமிடம் சி.நிரஞ்சலா (உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளம்), மூன்றாமிடம வி.வித்தியாதாரணி (உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்)

தமிழ் பேச்சுப் போட்டி நிகழ்வில் முதலாம இடம் க.திவ்யா (கோப்பாய பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), இரண்டாமிடம் இ.வினு (யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்), மூன்றாமிடம் க.றொபின்ஷன் மற்றும் ஜீ.சஜீவன் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியோர் வெற்றியீட்டுள்ளனர் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அறிவித்துள்ளது. (இ-7-23)

நன்றி: அததெரண




# நீதி கிடைக்க வேண்டும்

## யாழில் நேற்று கவனயீர்ப்பு போர்





(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சமூக மக்கள் ஒன்றிணைந்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கக்கோரி நேற்று . கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர். முற்பகல் 8.30 மணியளவில் யாழ். வேம்படி சந்தியில் இந்தப் போராட்டம் நடத்தினர்.

மேலும் இந்த கவனயீர்ப்பு போராட்டம் அரியாலை முள்ளி பிரதேசத்தில் 18 வயது யுவதி கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அப் பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தியும் இதே போல பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட அனைத்து பெண்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என கோரியும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

பெண்கள் இனியாவது பாதுக்காக்கப்பட வேண்டும். பெண்கள் மீது கைவைப்பதை நிறுத்த வேண்டும்.

எந்த பலம் வாய்ந்த சக்தியாக இருந்தாலும் நாம் அவர்களுக்கு எதிராக குரல் கொடுப்போம் எனவும் அந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (இ-4)

# மரண அறிவித்தல்



## பசுபதி ஶ்ரீபதி

(தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இணுவில் பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி ஶ்ரீபதி அவர்கள் நேற்று (10.11.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி (ஓய்வுபெற்றஆசிரியர்) இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் ஜெயபதி, சத்தியேஸ்வரி, சாந்தீஸ்வரி (கொக்குவில் இந்துக் கல்லூரி), கமலேஸ்வரி, குணசீலன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மனோஜீவா மற்றும் ஜீவமனோ ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 11.11.2014 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாலாவோடை, இணுவில். தகவல் : ப.ஜெயபதி (சகோதரன்)

# சீரான மழைவேண்டி யாழில் பிரார்த்தனை

யாழ்.தென்மராட்சி தெற்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள வரட்சியையடுத்து நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது. வரட்சியையடுத்து மழைவேண்டி அப்பகுதி விவசாயிகள் மற்றும் பல பொதுமக்கள் அப்பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் பிரார்த்தனைக்களை மேற்கொண்டுவருகின்றனர்.

இதில் குறிப்பாக தனங்கிளப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி போன்ற தென்மராட்சி தெற்குப்பகுதிகளில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக வயல்நிலங்கள் பெரிதும் பாதிப்ப டைந்துள்ளது என விவசாயிகளால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரதேசங்களில் உள்ள வயல்களில் ஏற்பட்ட கடும் வறட்சியினால் யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான வயல்கள் பாதிப்படைந்துள்ளன. யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான நெற்செய்கை மேற் குறித்த பிரதேசங்களில் அதிகம் மேற்கொ ள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இப்பிரதேசங்க ளில் ஏற்பட்டுள்ள வறட்சி யாழ். குடாநாட்டின் நெற்செய்கை வருமானத்திற்கே பாதிப்பை ஏற்படுத்திவருகின்றது.

அண்மையில் யாழ்.குடாநாட்டின் அநேகமான இடங்களில் பெய்த மழை தென்மராட்சியின் மேற்குறி த்த பிரதேசங்களில் பெய்யவில்லை.

இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நெற்செய்கை விவசாயிகள் தமது நெற்செய்கையினை கைவிடாது மழையை எதிர்பார்த்து நெற்செய்கைகளை ஆரம்பித்தனர்.

ஆனால் அவ்விவசாயிகள் எதிர்பார்த்தபடி மழையானது இதுவரை பெய்யவில்லை. இதனால் நெற்செய் கைகளை மேற்கொண்ட விவசாயி கள் தற்போது மழை இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வரட்சியானது தொடர்ந்து நிலவும் பட்சத்தில் தமது நெற்செய்கை முழுமையாக அழிவடைந்து போய்விடும் எனவும் நெற்செய்கைகள் அழிவடைந்தால் இவ்வருட பெரும்போக நெற்செய்கை யாழ் குடாநாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-7,37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி மாணவி கொலை; சந்தேகநபர் கைது

உக்குவெல-வராப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த பட்டதாரி மாணவியான லலினி நதிஷாவின் (வயது 24) இரகசிய கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவர், குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், நுகபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த மே மாதம் 24 ஆம் திகதி குறித்த பிரதேசத்தில் திருமண நிகழ்வு நடைபெறவுள்ளமையை தெரிந்து கொண்ட சந்தேகநபர், நள்ளிரவில் குறித்த யுவதியின் வீட்டு வளவுக்கு சென்றுள்ளார். பின்னர் யுவதியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது (இ)


## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(8221)


## அரசாங்க அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## வழங்குநரை பதிவு செய்தல்

யாழ்.மாவட்ட செயலகம், யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2015 ஆம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களை பதிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவுசெய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளை, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2014.11.11 தொடக்கம் 2014.12.02 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். www.jaffna.dist.gov.lk என்ற இணையத்தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 02.12.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்குநரை பதிவுசெய்தல் 2015"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டசெயலகத்தின் களஞ்சிய நலன்புரிக்கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வழங்கல்கள், சேவைகள் விபரம்.**

01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
02. மர, உருக்கு, பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் தளபாடங்கள் வழங்கலும், திருத்தலும்.
03. இலத்திரனியல், மின்சாரப்பொருட்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும், திருத்தலும், பராமரித்தலும்
04. சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்புப் பொருட்கள்
05. கட்டட நிர்மாணம், திருத்த வேலைகள் செய்தல், தீந்தை (பெயின்ற்), ஹாட்வெயர் பொருட்கள் வழங்கல்
06. மோட்டார் வாகனங்கள் திருத்தம், பராமரிப்புசெய்தல், ரயர், ரியூப், பற்றரிகள், உதிரிப்பாகங்கள் வழங்கல்
07. குடி நீர், பால்மா, மென்பானம், உணவு வகைகள்
08. திரைச்சீலைகள், சீருடைகள், மேசை விரிப்புக்கள், நில விரிப்புக்கள்
09. தோல் வகை உற்பத்திப் பொருட்களும், விளையாட்டுப் பொருட்களும்
10. அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், அடையாள அட்டைகள் செய்தல்
11. நீர் விநியோக பொருத்துக்கான பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் வழங்கல்
12. மின் இணைப்பு வேலைகள் குழாய் பொருத்துநர்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**மாவட்ட செயலர்,**
**யாழ் மாவட்டம்.**

(சி-9025)


# விசேட சலுகை

**வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.**

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

**மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...**

**தொடர்புகளுக்கு:- 021 2217 603**
**021 5671 532**
**Valampuriijaffna@gmail.com**


## அரசாங்க அறிவித்தல்
## கேள்வி அறிவித்தல்-2015

**யாழ் மாவட்ட செயலகத்தால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. செயலக சுத்திகரிப்புச் சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்)
2. புகைப்படப்பிரதி இயந்திர பராமரிப்பு
3. உள்ளகத் தொலைபேசித் தொகுதி பராமரிப்பு
4. வாகன சுத்திகரிப்புச் சேவை
5. செயலக பாதுகாப்புச் சேவை

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் செயலக களஞ்சியநலன்புரிக்கிளையில் 2014.11.11 ஆம் திகதியிலிருந்து அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக் கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன், ***"தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்"*** எனும் முகவரியிட்ட, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட சேவையினுடைய விபரத்தினை குறிப்பிட்டு 2014.11.25 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப 11.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**மாவட்ட செயலர்,**
**யாழ் மாவட்டம்.**

(சி-9025)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 16 3/4 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ வங்கியாளர்<br>தொ.இ: B/2012 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 41 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/3059 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 13 3/4 செவ் 8இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA/ முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/2014 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 30 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: G/3062 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 14 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ கனிய அளவையாளர்<br>தொ.இ: B/2015 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 12 3/4 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/3063 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 50 1/2 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (சவுதி)<br>தொ.இ: B/2017 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 44 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.COM/ ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: பெண் கணவனை இழந்தவர்<br>தொ.இ: G/3065 |

# கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் கட்டுப்பாட்டு விலையில் உரத்தை கொள்வனவு செய்ய முடியும்

### கிளி/மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள், மேற்பட்ட நிலப்பரப்பிற்கு தேவையான உரத்தை கட்டுப்பாட்டு விலையில் கமநல சேவை நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.தயாரூபன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஏக்கருக்கு குறைவான நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, கமநல சேவை நிலையங்கள் ஊடாக மானிய அடிப்படையில் உரங்கள் வழங்கப்படுகின்றன. 5 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள், 5 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பிற்கான நெல்லை தனியார் கடைகளில் அதிகூடியவிலையில் கொள்வனவு செய்கின்றனர். இருந்தும், கமநல சேவை நிலையங்களில் போதியளவு உரங்கள் கையிருப்பில் இருக்கின்றன. அவ்வுரங்களை ஒரு மூடைக்கு ஆயிரத்து 200 ரூபாவினை செலுத்தி கட்டுப்பாட்டு விலையில் விவசாயிகள் பெறமுடியும். ஆகவே, 5 ஏக்கருக்கு அதிகமான நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கமநல சேவை நிலையங்களில் ஆயிரத்து 200 ரூபாய் கட்டுப்பாட்டு விலையில் உரத்தை பெற்றுக கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# தூக்குமரம் மாயம்

(கொழும்பு)

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் இருந்த தூக்குமேடையில் இருந்த பெறுமதியான மரங்கள் மாயமாகியுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிககின்றன. பதப்படுத்தப்பட்ட தேக்கு மரங்கள் மற்றும் கட்டடங்களின் கூரையிலிருந்த மரங்கள், யன்னல்கள் மற்றும் கதவுகள் உள்ளிட்ட கோடிக்கணக்கான பெறுமதியான தளபாடங்களே மாயமாகிவிட்டதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

போகம்பரை சிறைச்சாலையிலிருந்த 1800 கைதிகள், பல்லேகலை தும்பர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் சிறைசசாலையிருந்த இடத்தை அபிவிருத்தி செய்வதற்காக அவ்விடம் கடந்த ஜுன் மாதம் 20ஆம் திகதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 120 |
| தக்காளி | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 50 |
| கோவா | 120 | 120 |
| கரட் | 160 | 160 |
| பூசணி | 50 | 50 |
| புடோல் | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 |
| சின்னவெங்காயம் | 80 | 100 |
| பெரியவெங்காயம் | 80 | 90 |
| பாகற்காய் | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 60 |
| பயற்றங்காய் | 160 | 160 |
| லீக்ஸ் | 280 | 260 |
| பீற்றூட் | 100 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 160 |
| போஞ்சி | 200 | 200 |
| கத்தரிகம்புள்ள | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 40 |
| தேசிக்காய் | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40-45 |
| இராசவள்ளி | 250 | - |

# 'சிக்னலால் சிக்கல்'

(மிருசுவில்)

புகையிரதக் கடவையில் மக்களின் பாதுகாப்பிற்காக ஒளிரவிடப் படும் சிக்னல் ஒளி தொடர்ச்சியாக 2 மணி நேரம் ஒளிர்ந்தமையால் மிருசுவில் உசன் பகுதியில் மக்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகிய சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த புகையிரதம் நேற்றுக் காலை 6 மணியளவில் மிருசுவில் உசன் பகுதியில் உள்ள புகையிரதக் கட வையைக் கடந்து யாழ்ப்பாணம் சென்றது.

ஆனால் புகையிரதமானது புகையிரதக் கடவையை கடந்த பின்பும் புகையிரதக் கடவை சிக்னல் ஒளி தொடர்ச்சியாக 2 மணி நேரம் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

இதனால் அப்பகுதியில் உள்ள புகையிரதக் கடவையினை கடக்க அப்பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் பெரிதும் அச்சப்பட்டனர்.

இதற்கமைய அங்கு நின்ற மக்கள் இருபக்கமும் நீண்ட நேரமாக காத்திருந்தார்கள்.

இதில் வேலைக்கு செல்லும் அரச தனியார் ஊழியர்கள் பாடசாலை மாணவர்கள் என பல பொது மக்கள் காத்து நின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளை புகையிரத நிலைய ஊழியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என அப்ப குதி மக்கள் தெரிவித்து ள்ளனர். (இ-7-85)

# இலவச கருத்தரங்கு

(மானிப்பாய்)


க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை தயார்படுத்தும் முகமாக முற்றிலும் இலவச கருத்தரங்குகள் எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுதுவையின் சுக்கிரன் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் கணிதம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு போன்ற பாடங்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.


மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களினால் நடத்தப்படவுள்ள இக் கரு த்தரங்கிற்கு அனைத்து மாணவர்களையும் கலந்து பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7-23)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (189)

டொறின் மன்மதநாயகம்




சர்மிலா சிவராஜா



பிரிய காந்

ஆங்கிலேயர் ஒருவரும், இலங்கைநாட்டு காரர் ஒருவரும் உரையாடிக் கொள்கிறார்கள்...
இலங்கைநாட்டு காரரை பார்த்து ஆங்கிலேயர் கேட்கிறார்...
ஆங்கிலேயர் : உங்கள் நாட்டில் உள்ள பெண்கள் ஏன் ஆண்களிடம் கை குலுக்க மறுக்கிறார்கள்,கை குலுக்குவது அப்படியொன்றும் தவறு இல்லையே...
இலங்கை மனிதர் : உங்கள் நாட்டு மகாராணியிடம் உங்கள் நாட்டை சேர்ந்த பாமர மக்கள் கை குலுக்க முடியுமா?
ஆங்கிலேயர் : அது முடியாதே...
இலங்கை மனிதர் : ஏன் முடியாது?
ஆங்கிலேயர் : அவர்கள் எங்கள் நாட்டு ராணி ஆயிற்றே...
இலங்கை மனிதர் : உங்கள் நாட்டை பொறுத்த வரை ராஜாவின் மனைவி மட்டும் தான் ராணி, ஆனால் எங்கள் நாட்டை பொறுத்தவரை அனைத்து பெண்களும் எங்களுக்கு மகாராணிகள் தான்.
இந்த பதிலை கேட்டவுடன் ஆங்கிலேயர் வாயடைத்து போனார்.


இரத்தினசபாபதி பாலராஜா

## இன்றைய பஞ்ச்




கடவுள் காதலித்தால் அது புராணம்...

மனிதன் காதலித்தால் அவனுக்கு மயானம்...



வினோ குமார்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடையார்கட்டு கமநலசேவை நிலையம் புனரமைக்கும் பணிகள் முன்னெடுப்பு

முல்லைத்தீவு, உடையார்கட்டு கமநல சேவை நிலையக் கட்டடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் 11.7 மில்லியன ரூபாய் செலவில் புனரமைக்கப்படுவதாக அக்கமநலசேவை நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. கடந்த 2009ஆம்ஆண்டு இடம்பெற்றவன்னி யுத்தம் காரணமாக உடையார்கட்டு கமநலசேவை நிலையக் கட்டடம் சேதமடைந்து, பெருமளவான சொதுக்களும் அழிவடைந்தன.

கடந்த 2011ஆம் ஆண்டு மேற்படி பகுதி மக்கள் மீள்குடியேறியதை அடுத்து, சேதமடைந்த கட்டடத்தின் ஒருபகுதியில பெரும் நெருக்கடிக்கு மத்தியில் கமநலசேவை நிலையம் இயங்கிவந்தது. இதனால், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள், உள்ளீடுகள் என்பவற்றை வழங்குவதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுவந்த நிலையில், இந்த வருடம் மேற்படி கமநலசேவை நிலையம் புனரமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டு, புனரமைப்பு பணி முனனெடுக்கப்படுகின்றது. இந்த வருட இறுதிக்குள் குறித்த நிலையத்தின் புனரமைப்பு பணி நிறைவடையும் எனவும் கமநல சேவை நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2)



முல்லைத்தீவு தண்ணீரூற்று முள்ளியவளை சீ.சீ.த.க.பாடசாலையில் இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மற்றும் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றபோது....
(படம்:-முள்ளியவளை செய்தியாளர்)

# காணி அபகரிப்பு தடுத்து நிறுத்தம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட மணவாளன் பட்டமுறிப்பு, கரிப்பட்டமுறிப்பு ஆகிய கிராமங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தமது சொந்த காணிகளை துப்புரவு செய்யாத நிலையில் அவற்றை வன இலாகாவினர் எல்லையிட்டு தம் எல்லைக்குள் கொண்டுவர முயன்ற சம்பவம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இக்காணிகள் அபகரிப்பு தொடர்பான முறைப்பாடொன்று நேற்று முன்தினம் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதில்தமது காணிகளில் எல்லைகளை இடுவதற்கான வேலைகளை வனஇலாகாவினர் தீவிரப்படுத்துவதாகவும் தம் காணிகளை மீட்டுத்தருமாறும் மக்கள் ரவிகரனிடம் கோரியிருந்தனர்.



முறைப்பாடுகளை அடுத்து அப்பிரதேசத்திற்கு விரைந்த ரவிகரன் குறித்த இடங்களை பார்வையிட்டதுடன் மக்கள் வசமிருந்த காணிப்பத்திரங்களையும் பெற்றுக் கொணடு ஓரிரு மக்கள் பிரதிநிதிகளுடன் வனஇலாகா பிரிவினரின் அலுவலகத்திற்குச் சென்றார்.

அதன்பின்னர் மணவாளன் பட்ட முறிப்பில் கள அதிகாரிகளுடனான சந்திப்பொன்று இடம் பெற்றது.

இதன்போது மக்களின் காணிகளில் எல்லைக்கற்களுக்கான குழிகள் தோண்டப்பட்டிருப்பதையும சில இடங்களில் எல்லைக் கற்கள் நாட்டப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டிய ரவிகரன், மக்களின் காணகள் துப்புரவாக்கப்படாததை வைத்து இவ்வாறு எல்லைகளை அதிகரிப்பது முறையல்ல என்பதை தெளிவுபடுத்தினார்.

மேலும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் முன்னர் மக்களுக்கு இது தொடர்பில் அறிவித்து மக்களோடு இணைந்தே இவ்வாறான எல்லைகளை இடும் பணி நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

மக்களின் உறுதிகளை பார்வையிட்ட வனஇலாகா கள அதிகாரி மக்களோடும் வடமாகாண சபை உறுப்பினரோடும் பற்றைகள் முற்றியிருந்த மக்களின் எல்லைகளை பார்வையிட்டு தம் எல்லைகளை தாம் மீள புதுப்பிப்பதாகவும் மக்கள் தமது காணிகளை எல்லைப்படுத்தி தமது வன இலாகா எல்லையிடலில் ஒத்துழைக்குமாறும் கேட்டிருந்தார்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற தமக்கு சந்ததி சந்ததியாக வயல விதைத்து அறுவடை செய்த பாரம்பரிய காணிகள் மீண்டும் தங்களுக்கு கிடைக்கப் பெற்றிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (2)




# யோகபுரம் கிழக்கு மக்களின் தேவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டத்தின் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட யோகபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள உள் வீதிகள் செப்பனிடப்படாது மின்சார வசதி ஆகியவை இன்றி மக்கள் வாழ்ந்து வருவதாக தெரிவிக் கின்றனர்.

1958 ஆம் ஆண்டு இப்பகுதியில் மக்கள் குடியேற்றம் செய்யப்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்று வரை உள்வீதிகள் அனைத்தும் தார் வீதியாக மாற்றப்படாது கிரவல் வீதியாகவே காணப்படுவதாக அப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ் வீதிகள் அனைத்தும் துணுக்காய் பிரதேசசபைக்குரியவையாகும். யோகபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் தற்போது 120 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்கள் அனைவரும் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டவர்களாவர். இதில் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பலதரப்பினருடனும் மக்கள் கலந்துரையாடி வீதிகளில் மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின் பிறப்பாக்கி இணைக்கப்பட்டு, வயல் இணைப்புக்கள் முடிவுற்று இரு மாதங்கள் கடந்தும் மின் இணைப்பு வழங்கப்பட்டவில்லையென அப்பகுதி மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வீடுகளுக்கான வயல் இணைப்புக்களும் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மாங்குளம் பிரதேச மின் பாவனையாளர் சேவை நிலையத்துடன் மக்கள் நேரடியாக சென்று முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அம்மக்கள் சுட்டிக்காட்டுகின் றனர்.

அத்துடன் வன்னி யுத்தத்திற்கு முன்னர் இப்பகுதியில் 55 விவசாயக் குடும்பங்கள் பயன்பெறக் கூடிய வகையில் ஏற்று நீர்ப்பாசனத் தொகுதி அமைக்கப்பட்டிருந்தது.

வன்னி யுத்தத்தை அடுத்து குறித்த ஏற்று நீர்ப்பாசன தொகுதியின் வாய்க்கால்கள், நீர் இறைக்கும் இயந்திரம் என்பன சேதமடைந்தன.

இதனையடுத்து ஏற்று நீர்ப்பாசனத்தினூடாக விவசாயம் செய்யும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆதலால் உரிய அதிகாரிகள் தமது கிராமத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு விரைந்து உதவிகளை வழங்க முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

## 15 ஏக்கர் கடற்பரப்பில் கடலட்டை உற்பத்தி; சிங்கி இறால் வளர்ப்புக்கான ஆய்வுகள்

### மன்னார் மாவட்ட நீர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரி தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தில் 15 ஏக்கர் கடற்பரப்பில் கடலட்டை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட நீர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரி பா.நிருபராஜ் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்திற்கு உட்பட்ட சவுத்பார், இலுப்பைக்கடவை, அந்தோனியார்புரம், தேவன்பிட்டி ஆகிய இடங்கள் உள்ளடங்கலாக 6 இடங்களில் கடலட்டை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு கிலோகிராம் கடலட்டையின் இலங்கை விலையில்27 ஆயிரம்ரூபாய்கது விற்கப்படுகிறது. எமது பிரதேச மக்கள் கடலட் டையை உணவில் சேர்த்துக்கொள்ளாததால்உள்ளூர்கொள்வனவு குறைவாக வேயுள்ளது.

இதனால் கடலட்டை உற்பத்தி முற்றுமுழுதாக ஏற்றுமதியை மையபடுத்தியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

கடலட்டை பிடிப்பதோ அல்லது அழிப்பதோ தடை செய்யப்பட்டுள்ள போதும் செயற்கை இனவிருத்தி மூலம் கடலட்டை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதால் அவற்றுக்கு தடை இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிங்கி இறால் உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மன்னார் மாவட்ட நீர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரி கூறியுள்ளார்.

அழிந்து செல்கின்ற மீனினங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு, அவற்றை செயற்கையாக இனவிருத்தி செய்வது தொடர்பாகவே இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த உற்பத்திகள் சட்டரீதியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் நண்டு மற்றும் மீன் இனங்களின் இனவிருத்தி தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## மதங்களுக்கிடையில் நட்புறவை ஏற்படுத்துவதற்கான ஒன்றுகூடல்

மத குருக்களாக பயிற்சி பெறும் மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு "சர்வ மத நட்புக்கான பயணம்" எனும் கருப்பொருளில் நேற்று முன்தினம் மன்னார் மடு மாதா சிறிய குருமடத்தில் நடைபெற்றது.

மன்னார் சர்வ மத பேரவையின் அனுசரணையில் நல்லிணக்கத்திற்கான வடக்கு, கிழக்கு சர்வ மத ஒன்றியம் ("நெய்வா") அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. இதில் சமாதான சூழ்நிலையை உருவாக்குவது தொடர்பாகவும் அதற்காக முன்னெடுக்கப்படும் விட யங்கள் தொடர்பாகவும் மதங்களுககிடையில் நட்புறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவது தொடர்பாகவும் பயிற்சி செயலமர்வும், கலந்துரையாடலும் இடம்பெற்றன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க விருந்தாளிகளாக பாரிய குற்றம் புரிந்தவர்கள்

## வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. தெரிவிப்பு



**(சென்னை)**

**சட்டப்படி பாரிய குற்றங்களை இழைத்த முன்னைய இயக்கத் தலைவர்கள் பலர். அரசாங்க விருந்தாளிகளாக இருந்து சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். சிறிய குற்றங்களில் ஈடுபட்ட இளவயது எம்மக்கள் பலர் எத்தனையோ வருடங்கள் சிறைகளில் வாடி வாழ்ந்து வருகின்றார்கள். மிகவும் மனவேதனையுடன் காலத்தைப் போக்கி வருகின்றனர் என வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கே.ஜி. கண்ணபிரான் நினைவு சொற்பொழிவு தமிழகத்தின் சென்னை தியாகராஜ நகர் திருமலைப்பிள்ளை தெருவில் உள்ள வித்தியோதயா கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. இதில் கலந்து கொணடு பாதுகாப்பையும் இறைமையையும் பங்கமின்றிப் பாதுகாத்தல் என்ற தலையங்கத்தின் கீழ் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலமைச்சரின் உரை முழுமையாக பிரசுரமாகிறது.

என் அன்புள்ள தமிழ்ப் பேசும பாரத நாட்டுச் சகோதர சகோதரிகளே,

ஆங்கிலத்தில் பேசினால் மட்டும் போதாது. எங்கள் தாய் மொழியிலும் நீங்கள் பேச வேணடும் என்றார்கள் கூட்ட அமைப்பாளர்கள். இன்று ஆங்கிலத்தில் நான் பேசியதைத் தமிழாக்கம் செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றபடியால் உங்கள் அயல் நாட்டுத் தமிழர் அவையில் அன்றாடம் நடப்பதை அல்லது நடக்காதிருப்பதை அண்ணளவாவது அலசி ஆராய்ந்தால் என்ன என்று எனக்குப்பட்டது. அங்கு நடப்பது பற்றி சற்று நேரத்திற்கு முன் என் ஆங்கிலப் பேச்சிலும் குறிப்பிட்டிருந்தேன்.

அதாவது தனக்கென மட்டும் அன்றி இலங்கைவாழ் வடகிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் சார்பாகவும் 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய உடன்படிக்கையில் பாரதம் கையெழுத்திட்டது. 13ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவால் தமிழர் சார்பில் எடுத்துரைத்த விடயங்களுக்கு இலங்கை அரசாங்கம் கையளித்த ஒரு முழுமையற்ற தீர்வாவணம். உடன்படிக்கையை எக்காரணம் கொண்டும் விரைவில் முடித்துவிட வேண்டும் என்று அக்கால இருநாட்டு முதல்வர்களும் முடிவெடுத்திருந்ததால் 13ஆவது திருத்தச் சட்டம் முக்கியமான அதிகாரங்களை நியாயமான முறையில் மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையில் பகிர்ந்து கொடுத்துள்ளதா என்ற கேள்விக்கு விடை தேடாமலேயே உடன்படிக்கை கைசாத்தி டப்பட்டது. மற்றவற்றைப் பிறிதொரு ஆவணத்தில் எம் உள்ளூரில் பதிய உடன்பாடு ஏற்பட்டது. அவ்வாறு கொண்டுவந்த சட்டந்தான் மாகாண சபைகள் (Provincial Councils Act)சட்டமாகும். உண்மையில் பாரதத்தின் எதிர்பார்ப்பு ஒன்றாய் இருக்க இலங்கை அரசாங்கம் கொடுத்த பதில் யாப்புத் திருத்தமும் அதையொட்டிய மாகாணசபைகள் சட்டமும் ஒருகையால் கொடுத்த அதிகாரங்களை மறுகையால் திரும்ப எடுப்பது போல் அமைந்திருந்தன. அதாவது ஆளுநரின் குறுக்கீட்டுக்கு ஆனவழிதேடி ஆவணம் அமைத்து, தந்தைப் பறிக்க அரசியல் சதி செய்யப்பட்டது. முழுநாட்டுக்கும் ஏற்புடைத்தான இச்சட்டம் தெற்கில் உள்ளவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக அமையவில்லை. காரணம் அவர்கள் யாவரும் ஒரே இனத்தவர்கள். பெரும்பாலும் ஒரே கட்சியினர், ஒரே மொழியினர். எம்மையோ இச்சட்டம் பலவிதங்களில் பாதித்தது. இது பற்றி ஏற்கனவே எமது தமிழ்த்தலைவர்கள்தெரிந்து கொண்டு 13ஆவது திருத்தச் சட்டம் ஜனனமான காலத்திலேயே நடக்கப் போவதைத் தீர்க்க தரிசனத்துடன் எடுத்தியம்பியிருந்தனர். பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு எமது தமிழ்த் தலைவர்கள் 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி எழுதி அனுப்பிய கடிதத்தில் இத்தீர்க்க தரிசன கருத்துக்கள் இடம்பெற்றன. வடக்கையும் கிழக்கையும் பிரிப்பார்கள் தென்னவர்கள் என்றார்கள். அது நடந்தது. மாகாண அதிகாரங்களை வலுவற்றதாக்க வழி ஏற்படுத்தப்படும் என்றார்கள். அது நடந்தது. சடங்கு ரீதியான பதவியில் இருத்தப்படும் ஆளுநர் அச்சட்டத்தை வைத்தே சபைகளின் அதிகாரங்களைத் தனதாக்கிக்குறுக்கிட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றார்கள். அதுவும் நடக்கின்றது. எதுவுமே இல்லை இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தில் என்றார்கள். அதைத்தான் நாங்கள் தேர்தல் காலத்திலும் கூறினோம். இப்பொழுதும் கூறி வருகின்றோம்.

ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ் உண்மையான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்க முடியாது என்பது தான் நாம் முக்கியமாகக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியதொன்றாகும். ஒற்றையாட்சியின் ஒரேயொரு அதிகார மையம் இது தான் என்று எமது அரசியல் யாப்பு மத்தியையே சுட்டிக் காட்டுகின்றது. மத்தி மனமுவந்து அதிகாரங்களைப் பகிர முன் வந்தால்தான் மாகாணங்கள் தம் மக்கள் நலனுக்காகப் பாடுபடலாம். வடமாகாண இனப்பரம்பலையே மாற்றியமைத்துப் பெரும்பான்மையினரை உள்நுழைத்து,கிழக்கு மாகாணம் போல் பெரும்பான்மையினரை வடக்கிலும் பெருவாரியாகக் குடியிருத்த இராணுவ மூலமாக நடவடிக்கை எடுத்து வரும் மத்திய அரசாங்கம் மனமுவந்து எமக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதுதான் தற்போதைய நிலை. எல்லா விதத்திலும் எம்மை இயங்கவிடாது தடுப்பதே அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்கின்றது.

அதிகாரம் இல்லாத வடமாகாண சபைக்கு ஏன் நீங்கள் தெரிவானீர்கள் என்று கேட்பீர்கள். நியாயமான கேள்வி அது. முன்னர் இதேபோல் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நாங்கள் பகிஷ்கரித்ததால் அரசாங்கத்தின் கையோங்கி தமிழ்பேசும் பிரதேசமான கிழக்கு மாகாணம் பாரிய சிங்கள ஊடுருவல்களுடன் தற்பொழுது காட்சி அளிக்கின்றது. நாம் சுதந்திரம் பெற முன் 5 சதவிகிதத்திற்கும் குறைய இருந்த கிழக்கு மாகாண சிங்களமக்களின் விகிதாசாரம் தற்பொழுது 30 சதவிகிதத்தைத் தாண்டி விட்டது. கிட்டத்தட்ட 35 சதவிகிதமாக இருக்கின்றது. முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் சேரந்து இருப்பதால் கிழக்கு மாகாண முதலமைச்சர் முஸ்லிமாகவும், அவைத் தலைவர் சிங்களவராகவும் எதிர்க்கட்சித் தலைவர் தமிழராகவும் இருக்கின்றார்கள்.

இதே நிலை வடமாகாணத்தைப் பாதிக்கக் கூடாது என்பதாலேயே வலுவற்ற, வெறிதான 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழும் நாம் தேர்தலில் பங்குபற்ற முடிவெடுத்தோம். பல விதங்களில் அது நன்மை பயத்துள்ளது. வெளி நாட்டுப் பணத்தில் பாரிய தெருக்களைப் போட்டு, இந்திய அரசாங்கத்தின் பணத்தில் புகையிரத வழிபாதைகள் அமைத்து, சர்வதேச நிறுவன உதவியுடன் கட்டடங்கள் கட்டி வடக்கில் வசந்தத்தை ஏற்படுத்தி விட்டோம் என்ற அரசாங்கத்திற்கு எம் மக்கள் தக்க பாடம் புகட்டினார்கள் தேர்தலின் போது. 38 ஆசனங்களில் எமது கட்சி 30ஐக் கைப்பற்றியது. எனவே மக்களின் மனோநிலை இத்தேர்தல் ஊடாக உலகத்திற்குத் தெரியவந்துள்ளது. தாம் நினைத்தவாறு ஆடி வந்த பாரிய இராணுவத்தின் பிரசன்னம் ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படுகின்றது. அப்படியிருந்தும் சிங்கள மக்களைத் தெற்கில் இருந்து கொண்டு வந்து வட மாகாணத்தில் குடியேற்ற அரசாங்கம் சகல நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது. இராணுவத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றது.தமிழ் பேசும் மக்களின் அரசாங்க அதிபர்களாக சிங்களவர்களை நியமித்துள்ளார்கள். எனினும் எமது சொற்ப அதிகாரங்களைப் பாவித்து பல கேள்விகளைக் கேட்டு அவர்களின் சிங்களமயமாக்கல் பயணத்திற்கு முட்டுக்கட்டைகளை இட்டே வருகின்றோம்.

ஆனால் எமது பிரதம செயலாளர் அரசாங்கத்தின் கைப்பொம்மையாக செயற்பட்டு ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் கருமங்கள் ஆற்றுவதால் எமக்கு கிடைக்க வேண்டிய அதிகாரங்களையும் நாம் பறிகொடுத்த நிலையில்தான் வாழ்கின்றோம். எமது வடமாகாண சபையின் நாளாந்த நடவடிக்கைகளில் நாம் எதிர்நோக்கும் சில விடயங்களை அடுத்துப் பட்டியல் இட்டுக் காட்டுகின்றேன். அவையாவன ,

1.பிரதம செயலாளர் முதலமைச்சரின் கட்டளைகளை ஏற்க வேண்டியதில்லை என்ற அடிப்படையில் மாகாண நிதிச்செயற்பாடுகளை நிர்வகிக்கும் அதிகாரம் முதலமைச்சரிடமிருந்து விலக்கப்பட்டுள்ளது.

2.மாகாண அமைச்சர வையின் எல்லாத் தீர்மானங்களும் பிரதம செயலாளர் மற்றும் ஆளுநரின் அனுமதியுடனேயே செயற்படுத்த முடியும் என்பதோடு இவர்கள் இருவரும் மத்திய அரசின் பிரதிநிதிகளாக இருப்பதால் மத்தியின் அரசியல் விருப்புக்கு மாறான விடயங்கள் அமுல்படுத்தப்பட முடியாமல் இருக்கின்றது.

3.மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மாகாண நிர்வாகத்துடன் எந்த வகையிலும் இணைந்து செயற்படாமல் மத்தியின் நிர்வாகத்தையும் மாகாண நிரல் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றனர். முக்கியமாகக் காணி சம்பந்தமான கடமைகள் இவற்றுள் அடங்குவன.

4.ஆளணி விடயங்களில் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள நியமனம், பதவி உயர்வு, ஒழுக்காற்று அதிகாரத்தின் மூலம் ஆளணியினரை மாகாண அரசு தனது கடமைகளை நிறை வேற்றுவதற்கு சுதந்திரமாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

5.நாம் செய்ய எத்தனிக்கும் விடயங்கள் மத்திய அரசில் உள்ள அரசியல் கட்சிகளின் விருப்புக்கு மாறான விடயங்களாக இருந்தால் மாகாண அரச அலுவலர்களைக் கொண்டு நாங்கள் அவற்றைச் செயற்படுத்தப் புகும்போது பிரதம செயலாளர் மற்றும் ஆளுநரின் அச்சுறுத் தல் மூலம் அவை தடை செய்யப்படுகின்றன.

6.மத்தியின் ஆளுங்கட்சி மற்றும் அதன் பிரதேச தலைவர்களின் முகவராக ஆளுநர் செயற்படுவதால் அவருக்கு அஞ்சி மாகாண அரசின் கடமைகளை எமது அலுவலர்கள் நிறைவேற்ற முடியாமல் தத்தளிக்கின்றனர்.

7.அத்துடன் மாகாண அலுவலர்கள் நேரடியாக ஆளுநரின் பணிப்புரைகளைச் செயற்படுத்த வேண்டியுள்ள ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

8.மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு ஆளுநரின் அறிவுறுத்தலுக்கேற்ப மத்திய அரசின் விருப்பு வெறுப்புக்களுக்கமையவே செயற்படுகின்றது. மாகாண அரசுக்கு வேண்டிய நியமனங்களை மேற்கொண்டு நடத்தல், மத்திய அமைச்சுக்களின் கட்டளைகளை சிரமேற்கொள்ளல் போன்றவை எமக்கு பலத்த பலவீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

9.நியதிச்சட்டங்களை அனுமதிப்பதில் ஏனைய மாகாணங்களில் இல்லாத கட்டுப்பாடுகளை ஆளுநர் எம் மாகாணத்தில் பிரயோகித்து வருகிறார். உதாரணத்திற்கு அண்மையில் வடமாகாண முதலமைச்சர் தமக்கென உத்தியோகபூர்வமான நிதியம் ஒன்றைத் திறக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபைக்கென ஒரு நிதியம் இருக்கின்றது. அது பிரதம செயலாளர் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. அதை விட்டு முதலமைச்சர் நிதியம் ஒன்றை அமைக்க நாங்கள் முற்பட்ட போது அது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்கள் நான்கில் அப்பேர்ப்பட்ட நிதியங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி ஜனாதிபதியிடம் இந்திய உயர்ஸ்தானிகரால் அண்மையில் வினவப்பட்டது. அதற்கு அவர் அளித்த மறுமொழி நாங்கள் பதவிக்கு வரமுன்னர் திறக்கப்பட்டவையே அந்த நிதியங்கள். நாங்கள் வந்த பின் அப்பேர்ப்பட்ட நிதியங்களைத் திறக்க நாங்கள் இடமளிக்கவில்லை. திறக்க விடவும் மாட்டோம் என்றாராம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு கூட்டமைப்பு ஆதரவு அளிக்க வேண்டும்

## பசில் கூறுகிறார்



(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். இவ்வாறு ஆதரவு வழங்குவதன்மூலம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும். அந்த வகையில் தனது நேர்மையை வெளிக்காட்டுவதற்காக கூட்டமைப்பு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தமிழ் தேசிய கூட்டமைப்பு இதுவரை எந்த வழியிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவிற்கு எந்தவொரு உதவியையும் செய்யவில்லை. அரசியல் ரீதியாகவோ இராஜதந்திர ரீதியாகவோ கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு இதுவரை உதவியதில்லை. எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குமென்று நம்புகின்றோம் என அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதாக பரவலாக எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவிற்கு ஆதரவை வழங்குவதன் மூலம் தமது நேர்மையை வெளிக்காட்டுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு சிறந்த சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. அதன்படி தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு சாதகமான ஒரு சிறந்த தீர்மானத்தை எடுக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த காலம் முழுவதும் த.தே. கூட்டமைப்பு தவறான தீர்மானங்களையே எடுத்தது. ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிற்கு கூட்டமைப்பினர் ஆதரவு தெரிவித்தனர். அந்த சந்தர்ப்பத்தில் சந்திரிகா பணடார நாயக்க வரலாற்று ரீதியான வெற்றியை பெற்றுக்கொண்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



மத குருக்களாக பயிற்சி பெறும் மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு சர்வ மத நட்புக்கான பயணம் எனும் கருப்பொருளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் மடு மாதா சிறிய குருமடத்தில் நடைபெற்றது. மன்னார் சர்வ மத பேரவையின் அனுசரணையில் நல்லிணக்கத்திற்கான வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியம் (நெய்வா) அமைப்பின். ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

# கொள்கைகள் மாறாவிடின் ஜனாதிபதியை மாற்றுவோம்

## ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்கி அதிகாரப் பகிர்வினை நோக்கி பயணிக்க சகல தரப்பினரையும் இணைத்து மக்கள் புரட்சிக்கு தயாராகின்றோம். அனைத்து மக்கள் முன்னிலையிலும் ஜனாதிபதியின் கொள்கையினை மாற்ற வலியுறுத்துவோம். முடியாவிடின் ஜனாதிபதியை மாற்றுவோம் என தெரிவித்த அத்துரலியே ரத்னதேரர் ஈழம் பயத்தினை காட்டி ஆட்சியினை தக்க வைப்பது கோழைத்தனமானது. தமிழர்கள் ஈழவாதிகள் அல்லர் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தூய்மையானதொரு நாளைக்கான தேசிய பேரவையினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இணைத்தலைவர் அத்துரலிய ரத்னதேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்திற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுவது ஏன் என ஜனாதிபதி எம்மிடம் கேள்வி எழுப்புகின்றார். எம்மிடமும் பல கேள்விகள் உள்ளன. இவ்வளவு அவசரமாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவது ஏன்? நிறைவேற்று முறைமையினை நீக்காது அடம்பிடிப்பது ஏன்? என்ற பல கேள்விகள் கேட்கின்றோம். நிறைவேற்று முறைமையினை நீக்காததன் காரணத்தினாலேயே நாட்டில் இன்று பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஒரு சிலரின் குடும்ப அரசியலின் அரசையும் அதிகார அரசையுமே இன்று அனைத்து மக்களையும் பாதித்துள்ளது.

**மாற்றம் ஒன்றினை எதிர்பார்க்கின்றோம்**

எதிர்காலம் பல மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்பதையும் பல புதுமைகளும் நன்மைகளும் ஏற்பட வேண்டும் என்பதனையே நாம் விரும்புகின்றோம். நிறைவேற்று முறைமையின் விசப்பற்கள் பிடுங்கப்பட வேண்டும். 18ஆவது திருத்தத்தின் சர்வாதிகாரம் நீக்கப்பட வேண்டும். யுத்தத்தினை வென்றதனைப் போல் நாட்டின் ஜனநாயகத்தையும் வென்றெடுக்க வேண்டும். அதற்கான ஆரம்பத்தினை ஏற்படுத்தியுள்ளோம்.

**அரசில் இருப்பதால் அடிமைகள் இல்லை**

அரசாங்கத்தில் இருப்பதனால் அரசின் பங்காளிக்கட்சியாக உள்ளதனால் நாங்கள் அரசின் அடிமைகள் அல்லர். அரசாங்கம் என்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுமில்லை. அலரி மாளிகையும் அல்ல.

அரசாங்கம் என்பது மக்கள். மக்களின் ஆதரவு அந்த மக்களின் ஆதரவில் நாங்களும் ஒருவர். இந்த மக்களை பாதுகாக்கவே நாம் பாடுபடுகின்றோம். இதில் ஒரு சிலர் தங்களை தலைவர்களாக நினைத்துக்கொள்வதனால் எந்தப் பயனுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## அனைவரும் சமம்

ஒரு சிகை அலங்காரக் கூடம். மிகவும் சுறுசுறுப்பாக எல்லோரும் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

முடிவெட்ட அதிகமானவர்கள் வந்திருந்தார்கள். எல்லோரும் வரிசையாக அமர்ந்திருந்தார்கள்.

அந்த நேரத்தில் திடீரென்று கதவைத் திறந்து கொண்டு ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் ஒரு பெரிய மனிதர். அவரும் முடிவெட்டுவதற்காகத் தான் அங்கு வந்திருந்தார்.

அவரைப் பார்த்தவுடனேயே அங்கே வரிசையில் அமர்ந்திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து அவரின் அருகே வந்து அவரைச் சுற்றி நின்றார்கள்.

எப்படி இருக்கிறீர்கள் , நலமாக இருக்கின்றீர்களா என்று விசாரித்தனர்.

எல்லாம் முடிந்ததும் வந்தவர் வரிசையிலே கடைசியாக இருக்கின்றவர் யார்? என்று கேட்டார். ஏன்? என்று கேட்டார்கள்.

நான் அதற்கு அடுத்த படியாக அமர வேண்டும், அதற்காகத் தான் கேட்டேன் என்றார்.

உடனே அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள், நீங்கள் வரிசையிலே காத்திருக்கக் கூடாது. நீங்கள் அரசாங்கத்தின் தலைவர், எங்களுக்கு நேரம் முக்கியம். அதனாலே நீங்கள் முதலாவதாக அமருங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் அவர் அதைக் கேட்கவில்லை. தோழர்களே உங்கள் கருத்துக்கு நன்றி. எல்லோரும் வரிசையின்படி தான் வரவேண்டும். அது தான் முறை. வரிசையிலே வரவேண்டும் என்ற நடைமுறையை நானும் பின்பற்ற விரும்புகிறேன். நாம் எல்லோரும் சமமானவர்கள் என்றார்.

இப்படிச் சொல்லி விட்டு வரிசையிலே கடைசியாக இருந்த ஒருநாற்காலியில் அவர் அமர்ந்து கொண்டார்.

தன் சட்டைப் பையிலிருந்த ஒரு செய்தித் தாளை எடுத்தார். படிக்க ஆரம்பித்தார்.

ஆனால் அங்கே இருந்தவர்களால் இதைப் பார்த்துக் கொண்டு பேசாதிருக்க முடியவில்லை ஒருவர் எழுந்து வந்தார்.

ஐயா இப்போது என்னுடைய முறை. நீங்கள் இங்கே காத்துக்கொண்டிருப்பதை விட, ஐந்து ஆண்டுகளுக்கு கூட முடி வெட்டிக் கொள்ளாமல் என்னால் இருக்க முடியும் என்றார். அவர் நிமிர்ந்து பார்த்தார். இவர் மறுபடியும் சொன் னார்.

ஐயா, நீங்கள் வரிசை முறையைத் தாண்டிப் போக விரும்பவில்லை. சரி ஆனால் என்னுடைய முறையை மாற்றிக் கொடுக்க எனக்கு முழு உரிமையும் இருக்கிறது. இதற்குப் பதிலாக உங்களுடைய கடைசி இடத்தை நான் எடுத்துக் கொள்கிறேன். இதை நீங்கள் மறுக்க முடியாது என்றார்.

அங்கே இருந்த மற்றவர்களும் இதை ஒரு மனதாக வற்புறுத்த ஆரம்பித்தார்கள்.

அந்தப் பெரிய மனிதர் ஒருவாறு ஒப்புக்கொண்டார்.

அவர் யார் தெரியுமா? , அவர் தான் மாவீரர் லெனின்.

ரஷ்யாவிலே கிரெம்ளின் சிகை அலங்காரக் கூடத்திலே தான் இச்சம்பவம் நடந்தது. எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று வாயளவில் பேசுவதில் என்ன பயன்?.

நாம் எல்லோரும் சமம் என்பதை நடைமுறையில் காட்டியவர்கள் மிகச் சிலர் தான் உள்ளார்கள்.

அவர்களில் ஒருவர் தான் தோழர் லெனின்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









1,000 ஆண்டுகளுக்கு முன்பு கொரியக் கிராமம் ஒன்றில், அண்ணன் தம்பி இருவர் வசித்து வந்தனர்.

அண்ணன் பெயர், நோல்பு.

தம்பி பெயர் கியூங்பு.

நோல்பு, பெரிய பணக்காரன்.

ஆனால், பேராசைக்காரன்.

இரக்கம் இல்லாதவன்.

எந்த நல்ல குணமும் அவனிடம் இல்லை.

தன் தம்பிக்குக்கூட தோட்டத்தில் விளையும் தானியத்தில் கொஞ்சமும் கொடுக்காதவன்.

தம்பி கியூங்பு, ஏழையாக இருந்தாலும் அடுத்தவருக்கு உதவும் குணம் உள்ளவன்.

ஒருநாள்... குயில் ஒன்று கால் ஒடிந்து வலியால் துடிப்பதைக் கண்டான் கியூங்பு.

உடனே அந்தக் குயிலைத் தன் வீட்டுக்கு எடுத்துச்சென்று, மருந்து போட்டு கவனித்துக கொண்டான்.

அதற்கு, உணவும் நீரும் கொடுத்துப் பராமரித்தான்.

குயில் நன்றாகக் குணம் அடைந்ததும், கியூங்புவுக்கு நன்றி சொல்லி விட்டுப் பறந்துபோனது.

தனக்கு உதவி செய்த கியூங்புவுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவ நினைத்தது.

வசந்த காலம் துவங்கியபோது, பூசணி விதை ஒன்றை கியூஙபுவிடம் கொடுத்து விட்டுச் சென்றது.

கியூங்பு, அந்தக் குயில் கொடுத்த விதையைத் தன் வீட்டுக்கு முன்பாக விதைத்தான்.

பூசணிக்கொடி நன்கு வளர்ந்து பெரிய பெரிய பூசணிகள் காய்த்தன.

அந்தப் பூசணிகளைப் பறித்து, ஊர்ச் சந்தையில் விற்க நினைத்தான்.

அன்று இரவு, சமைப்பதற்கு ஒரு பூசணியை எடுத்து வெட்டினான்.




உள்ளே விதைகளுக்குப் பதிலாக தங்கக் கட்டிகள் இருந்தன.

கியூங்புவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

அடுத்தடுத்த பூசணிகளை வெட்டினான்.

எல்லாக் காய்களில் இருந்தும் தங்கக் கட்டிகள் கொட்டின.



இப்போது, கியூங்பு தன் சகோதரன் நோல்புவைவிட பெரிய பணக்காரன் ஆகிவிட்டான்.

சிலருக்கு பணம் வந்துவிட்டால், குணம் மாறிப் போகும்.

ஆனால், கியூங்பு பணக்காரன் ஆன பிறகும் எளிமையாக இருந்தான்.

இல்லாதவர்களுக்கு உதவினான்.

திடீர் பணக்காரத் தம்பியின் ரகசியத்தை அறிய நோல்பு விரும்பினான்.

'இதுவரை எந்த உதவியும் செய்யாத நாம் போனால், தம்பி பேசுவானா... அப்படியே பேசினாலும் பணக்கார ரகசியத்தைச் சொல்வானா?' என்ற தயக்கத்துடன் தம்பியின் வீட்டுக்குச் சென்றான்.

திடீரென்று வீடு தேடி வந்த அண்ணனை முக மலர்ச்சியோடு வரவேற்று உபசரித்தான் கியூங்பு.

எப்போதுமே வராத அண்ணன், தேடி வந்ததில் மகிழ்ச்சியே.

அண்ணனுக்கு விருந்து கொடுத்து நன்கு உபசரித்தான்.

"எல்லாம் சரி தம்பி, உனக்கு எப்படி இவ்வளவு வசதி வந்தது?" என்று கேட்டான் நோல்பு.

கள்ளம் கபடம் இல்லாத கியூங்பு, "அதுவா அண்ணே, எல்லாம் ஒரு குயில் புண்ணியத்தால் வந்தது" என்று சொன்னான்.

"ஆச்சரியமா இருக்கே. குயிலால் எப்படி உன்னைப் பணக்காரன் ஆக்க முடிந்தது?" என்று கேட்டான் நோல்பு.

நடந்த விஷயங்களை அண்ணனிடம் சொன்னான் தம்பி.

(தொடரும்)




- 1500 - பிரான்சின் பன்னிரண்டாம் லூயி மன்னனுக்கும் ராகனின் இரண்டாம் பேர்டினண்ட் மனனுக்குமிடையில் நேபில்ஸ் பேரரசைத் தமக்கிடையே பிரிக்க உடன்பாடு எட்டப்பட்டது.
- 1673 - உக்ரேனின் கோட்டின் என்ற இடத்தில் போலந்து-லித்துவேனியப் படைகள் ஓட்டோமான் இராணுவத்தைத் தோற்கடித்தன.
- 1675 - குரு கோவிந்த்சிங் சீக்கியர்களின் 10ஆவது குருவானார்.
- 1675 - லெய்ப்னிட்ஸ் (Gottfried Leibniz) என்பவர் y=f(x) என்ற செயலி ஒன்றின் வரைபின் பரப்பைக் காணுவதற்கு முதன் முறையாக தொகையீட்டு நுண்கணிதத்தைப் பாவித்தார்.
- 1865 - டீஸ்ட்டா ஆற்றின் கிழக்குப் பகுதிகளை பூட்டான பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்குக் கொடுத்தது.
- 1889 - வோஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது மாநிலமாகச் இணைக்கப்பட்டது.
- 1909 - ஹவாயில் பேர்ள் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது.
- 1918 - பிரான்சில் "கொம்பியேன் காடு" என்ற இடத்தில் தொடருந்துப் பெட்டி ஒன்றில் ஜேர்மனிக்கும் கூட்டுப் படைகளுக்குமிடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. முதலாம் உலகப் போர் 11:00 மணிக்கு முடிவுக்கு வந்தது.
- 1918 - ஜோசப் பித்சூத்ஸ்கி வார்சாவுக்குத் திரும்பி போலந்தின் உயர் இராணுவப் பதவியைப் பெறறான். போலந்து விடுதலை பெற்றது.
- 1919 - இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
- 1930 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர தமது கண்டுபிடிப்பான ஐன்ஸ்டைன் குளிர் சாதனப் பெட்டிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1933 - யாழ். பொது நூல் நிலையம் அமைக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனி பிரான்ஸ் மீதான தனது முற்றுகையை முடித்தது.
- 1960 - தெற்கு வியட்நாம் அதிபர் நியோ டின்டியெம் மீதான இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1965 - ரொடீசியாவில் இயன் ஸ்மித் தலைமையிலான வெள்ளை இன சிறுபான்மை அரசு விடுதலையை அறிவித்தது.
- 1966 - நாசா ஜெமினி 12 கப்பலை விண்ணுக்கு அனுப்பியது.
- 1968 - மாலைதீவுகளில் இரண்டாவது குடியரசு அறிவிககப்பட்டது.
- 1975 - ஆஸ்திரேலியப் பிரதமர் கஃப் விட்லம் தலைமையிலான அரசை அதன் ஆளுநர் கலைத்தார்.
- 1992 - இங்கிலாந்து திருச்சபை பெண்களையும் சமயகுருக்களாக சேர்ப்பதற்கு முடிவெடுத்தது.
- 2004 - யாசர் அரபாத் இறந்து விட்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது. மஹ்மூத் அப்பாஸ் தலைவரானார்.

பிறப்புகள்

- 1898 - கி. ஆ. பெ. விசுவநாதம், தமிழறிஞர் (இ. 1994)
- 1821 - பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ. 1881)
- 1937 - ப.ஆப்டீன், ஈழத்து எழுத்தாளர்
- 1945 - டானியல் ஒர்ட்டேகா, நிக்கராகுவாவின் குடியரசுத் தலைவர்

இறப்புகள்

- 1993 - கப்டன் மயூரன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி (பி. 1970)
- 1993 - கப்டன் ஈழமாறன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி (பி. 1973)
- 2004 - யாசர் அரபாத், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர், நோபல் பரிசாளர் (பி. 1929)
- 2005 - பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர் (பி. 1909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...மார்க்வா 1998 இல் எழுதிய ஒரு கட்டுரையில் சச்சின் 2010 ஆம் ஆண்டு வரை கண்டிப்பாக விளையாடுவார் என்றும் அதற்குள் 40 செஞ்சுரி அடித்துவிடுவார் என்றும் நம்பிக்கையுடன் எழுதியிருந்தார். அவரது கணிப்பின் படி நாற்பது செஞ்சுரிகளை எட்ட இன்னும் ஆறுதான் பாக்கி. 200 டெஸ்டுகள், 20,000 ரன்கள், 100 செஞ்சுரிகள் என்ற இமாலய சாதனையைச் சச்சின் செய்ய வேண்டும் என்பதுதான் எல்லோரின் எதிர்பார்ப்பு.

பிரபல பத்திரிகையாளர் ஒருவர் சச்சின் 2010 இல் எப்படி இருப்பார்? என்னனென்ன சாதனைகளைச் செய்திருப்பார்? என்று கற்பனையாக எழுதி உள்ளார். 48 டெஸ்ட் செஞ்சுரிகள். 17,000 ரன்கள், 39 ஒரு நாள் செஞ்சுரிகள், 23, 595 ரன்கள் என்று கணித்திருக்கிறார். கிட்டத்தட்ட 39 நிகழ்வுகள் நடக்கலாம் என்னும் விதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவை: இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா சச்சினுக்கு வழங்கப்படும். இந்த விருதைப் பெறும் முதல் விளையாட்டு வீரர் என்ற தகுதியும் அவரையே சென்றடையும்.

சச்சின் விளாசிய நூறுகளின் அடையாளமாக அவரது முகம் பொறிக்கப்பட்ட ரூ.100 நாணயம் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும்.

சச்சின் சிறப்புகளுக்கு மரியாதை அளிக்கும் விதமாக அவரது உருவம் தாங்கிய தபால் தலை வெளியிடப்படும்.

சச்சின் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் பாந்த்ரா பகுதி இனி சச்சின் டெண்டுல்கர் நகர் என்று அழைக்கப்படும்.

சச்சின் பிறந்த ஏப்ரல் 24 திகதி ஒருமைப்பாடு தினமாக அறிவிக்கப்படும். சாதி, இனம், மொழி, மதம் ஆகிய அனைத்து வேற்றுமைகளையும் கடந்து அனைவரையும் தனது அபார கிரிக்கெட் விளையாட்டுத் திறமையால் ஒன்றுபடுத்தியமைக்காக இந்த கௌரவம் சச்சினுக்கு வழங்கப்படும்.

- ❖ பேட்டிங் ஸ்டைல்:- வலது கை ஆட்டக்காரர்
- ❖ பௌலிங் ஸ்டைல்:- லெக் பிரேக் சுழற்பந்து வீச்சாளர்
- ❖ மட்டைஎடை:- 3பவுண்ட் 2அவுன்ஸ் அல்லது 1.42 கிலோ
- ❖ மறக்கமுடியாதது:- 1992 இல் உல கக்கோப்பை பாகிஸ்தான் வீழ்த்தியது.
- ❖ மோசமானது:-1992 ஆர். எஸ்.ஏ ஒருநாள் போட்டிகளில் தோற்றது
- ❖ ஹீரோக்கள்:- கவாஸ்கார், விவ் ரிச்சர்ட்ஸ், கபில், இம்ரான்கான், சந்திப்பாட்டீல்
- ❖ பிடித்தவர்கள்:-வினோத் காம்ப்ளி, லாரா, ரோட்ஸ்

## எதிர்காலத்தில் சச்சின்!



கொல்கத்தாவில் ஈடன் கிரிக்கெட் மைதானம் இனி சச்சின் கிரிக்கெட் மைதானம் என்று பெயர் மாற்றி அழைக்கப்படும்.

மத்திய, மாநில அரசுகள் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்க சச்சின் பெயரில் வாரியங்களை அமைக்கும்.

சச்சின் கிரிக்கெட் வாரியத்தின் தலைவராகலாம். அல்லது கிரிக்கெட் வர்ணனையாளர் ஆகலாம். அல்லது இளம் கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிக்கும் பணியில் இருக்கலாம்.

என்றெல்லாம் அவரது கற்பனைக் குதிரை ஓடிக்கொண்டேயிருக்கிறது.

ஆனால், சச்சின் மேற்கத்திய யூகங்களுக்கு பதில் தரத் தயாராக இல்லை. மட்டையைப் பிடித்து மைதானத்தில் இறங்கிவிட்டால் எனது தாய் நாட்டிற்காக விளையாடுகிறேன் என்ற எண்ணம்தான் என்னிடம் மேலோங்கி இருக்கும்.

இத்தனை ஆண்டு அனுபவத்தில் நன்றாக விளையாடினால் கிடைக்கும் போற்றுதல்களையும், மோசமாக விளையாடினால் கிடைக்கும் தூற்றல்களையும் சமமாக ஏற்றுக் கொள்ளப் பக்குவப்பட்டுவிட்டேன் என்கிறார்.

கே. ரமேஷ் (தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

(பலத்த சிரிப்பு)

...கவலைப்படுவதற்கான காரணம் இன்றி, உங்கள் அஹங்காரம் அதன் இருப்பிற்கான காரணத்தை இழக்கிறது! அதனால்தான் நீங்கள் துன்பப் பரிமாணத்திலேயே இருக்கத் தீர்மானிக்கிறீர்கள். கவலையில் இருக்கும்பொழுது, நீங்கள் யாரோ ஒருவராக இருப்பதாக உணர்கிறீர்

## கவலைகள் இன்றி வாழ்தல்!

கள். நீங்கள் எப்பொழுதும் கவலைகளைப் பற்றி நினைப்பதாலும் அவற்றைத் தீர்ப்பதாலும் உங்களை திடமான ஒரு வஸ்துவாக உணருகிறீர்கள்.

அதே சமயத்தில் இந்த நிரந்தரமான கவலைகளிலிருந்து நீங்கள் விடுதலை பெறும்பொழுது ஆனந்தத்தில் இருப்பீர்கள். ஆனால், நீங்கள் இந்தப் பரிமாணத்தில் இல்லாதவராக இருப்பீர்கள்! நீங்கள் செயற்பட்டுக் கொண்டே இருப்பதற்கு விடயம் எதுவும் இல்லை. தீர்ப்பதற்கு எதுவுமில்லை. நீங்கள் பாதுகாப்பற்று, ஒரு தனி வஸ்துவாக இல்லாததுபோல் உணருகிறீர்கள். கவலையற்று இருக்கும் நிலையை அனுபவிப்பதற்கு முதல்படியாக நீங்கள் திடமான வஸ்துவாக இருக்க விரும்பும் உங்கள் அஹங்காரத்தை விட்டொழிக்க வேண்டும்.

முதலில், கவலையைப் பற்றிய ஒரு விடயம் என்னவென்றால், கவலைப்படுதல் என்பதே உங்கள் மனதிற்கு எப்போதும் உணவளித்து அதை எப்போதும் செயற்பட வைத்துக் கொண்டேயிருப்பதற்கான உங்கள் தீர்மானம். இதற்கெல்லாம் மேலாக ஒவ்வொரு



மனதனும் [illegible], அவன் அல்லது அவள் யற்று இருப்பதாகவும், மற்ற அனைவரும் மிகவும் சந்தோஷமாகவே இருப்பதாகவும் எண்ணுகிறான்! ஆனால், இதில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால், இந்தப் பூமியில் ஒவ்வொரு மட்டுமே மிகவும் துர்திருஷ்டமானவர் என்றும் மிகவும் மகிழ்ச்சியற்றவர் என்றும் நினைப்பதுதான்! இது எவ்வாறு சாத்தியம்?

ஒரு சின்ன கதை...

ஒரு அரசாட்சியில் மக்கள் அனைவருமே மிகுந்த மனச்சோர்வில் இருப்பதாகவும் ஒவ்வொருவரும் தங்களுக்கே மிக அதிகமான கவலைகள் இருப்பதாகவும் மற்ற யாருமே கவலைகள் எதுவுமே இல்லாமல் இருப்பதாகவும் எண்ணுவதாக அரசனுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதனால் மன்னன் ஒரு கவலை பரிமாற்றத் திட்டம் அறிவித்து மக்கள் தங்கள் பெரிய கவலைகளைக் கொண்டு வந்து அதற்குப் பதிலாக மற்றவர்களின் சின்ன கவலைகளை மாற்றி எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று அறிவித்தான். ஒரு பெரிய இடம் தயார் செய்யப்பட்டு, அதன் நடுவில் ஒரு மிகப்பெரிய கவலைப்பானை வைக்கப்பட்டது. யார் வேண்டுமானாலும் தங்கள் கவலைகளை அதில் கொட்டிவிட்டு, அவர் விரும்பும் வேறு கவலைகளை எடுத்துச்செல்லலாம். (தொடரும்)

ஆன்மீகம் 71

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015




...எமது நாடு விளையாட்டுத் துறையில் மிக சிறந்து விளங்குகின்றது என்ற வகையில் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டில் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கான பயிற்சி வழங்குவதற்கான சகல வசதிகளுடன் கூடிய விளையாட்டு கல்வி நிறுவகமொன்றினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பிரதேச சபைகளை வலுவூட்டல்**

துப்பரவேற்பாடு, கழிவு முகாமைத்துவம், வடிகாலமைப்பு பராமரிப்பு, பாதைகள், சிறுவர் பூங்காக்கள் போன்ற சமுதாய அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு பெரும்பாலான பிரதேச சபைகளுக்கு போதிய வளங்கள் காணப்படுவதில்லை என்பதனை உணர்ந்து 2014 வரவு செலவுத்திட்டத்தில் ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் அவற்றினது பராமரிப்பு அலகுகளை வலுப்படுத்தும் வகையில் சிறிய நிர்மாண உபகரணம் மற்றும இயந்திரங்கள், ட்ரக்டர்களை அரசாங்கம் வழங்கியது.

அத்தகைய சமுதாய அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக வருமானம் குறைந்த பிரதேச சபைகளுக்கு 2015 இல் மாதமொன்றுக்கு ரூபா 2 மில்லியனாக மானிய உதவிகளை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அவற்றினது பராமரிப்பு, துப்பரவேற்பாட்டு அலகுகளை இயக்குவதற்கான பதவியணி தேவை என்ற வகையில் ஒப்பந்த வேலைகளுக்கு பகரமாக அத்தகைய பராமரிப்பு பணிகளில் ஈடுபடுவதற்குகள உத்தியோகத்தர்கள் 15,000 பேரினை ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேலதிகமாக ரூபா 600 மில்லியனை நான் ஏற்பாடு செய்கின்றேன்.

**மாகாண சபைகளின் அபிவிருத்தி செலவினம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதன் பின்னர் முதற் தடவையாக 9 மாகாணங்களுடன் நிதியமைச்சு தொடர்புபடுவதுடன் 2015 -17 நடுத்தர கால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்திற்கேற்ப முன்னுரிமைகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட செலவின நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பின்னணியில், மாகாணப் பாடசாலைகளை துப்பரவேற்பாடு, ஆசிரியர் வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் உள்ளடங்கலாக சிறுவர் நட்பு சூழலொன்றாக மாற்றுதல், மாகாண வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களை வலுவூட்டல், விவசாயம், கால்நடை, மீன்பிடி மற்றும் சிறு கைத்தொழில்கள் தொடர்பான மாகாண சேவைகளை உறுதிப்படுத்தல், பயணிகள் போக்குவரத்து வசதி, பாதை, சந்தை வசதிகள் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

எனவே, இச்செயற்பாடுகளினை நடுத்தர கால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்திற்குள் விரிவாக்குவதற்காக மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை ரூபா 7,000 மில்லியனாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

பகுதியளவு நகர மற்றும் கிராமியப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு 50,000 ரூபா சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**தனியார் போக்குவரத்து**

கௌரவ சபாநாயகர் அவர்களே, பயணிகள் போக்குவரத்தில் 60 சதவீதமான பேரூந்து சேவைகளை வழங்கும் இத்துறையின் தரத்தினை மேம்படுத்துவதற்கு சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான பயிற்சி வழங்கல் வசதிகளை விரிவாக்குவதற்கு போக்குவரத்து பயிற்சி நிறுவகமொன்றினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

முற்கொடுப்பனவு அட்டைத் திட்டம் வரிகளிலிருந்து விலக்களிக்கப்படும். ஆகக் குறைந்தது 5 வருடங்கள் சேவையில் ஈடுபட்ட ஒவ்வொரு பேரூந்துகளுக்கும் வரிச் சலுகை அடிப்படையில் புதிய பேரூந்து இயந்திரங்கள் மற்றும் கியர் பெட்டிகளை இறக்குமதி செய்வதனை அனுமதிப்பத்கு நான் முன்மொழிகின்றேன்.

ஆகக் குறைந்தது 5 வருடங்கள் சேவையிலீடுபட்ட பேரூந்து உரிமையாளர்களினால் புதிய பேரூந்துகளை கொள்வனவு செய்வதற்கான முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு 6 சதவீத வட்டி அடிப்படையில் கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தனியார் பேரூந்து உரிமையாளர்களினால் பயன்படுத்தப்பட்ட பேரூந்துகளின் விற்பனையிலிருந்து வருமான வரி விலக்களிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

பாடசாலை சிறுவர்கள், சுற்றுலா பயணிகள், சிறிய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொருள் போக்குவரத்துக்கான தேவைகளுக்கு வசதியளிக்கும் வகையில் வேன்கள், சிறிய பேரூந்துகள் மற்றும் ட்ரக்குகளின் இறக்குமதி மீதான வரிகள் குறைக்கப்படும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் மாற்றுக் காப்புறுதி ஒன்று மேற்கொள்ளப்படும் வகையில் சுய தொழில் புரிவோருக்கு திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் சமூகப் பாதுகாப்பு பிரிவினூடாக புதிய காப்புறுதி மற்றும் ஓய்வூதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**மின்சாரக் கட்டணம்**

மின் உற்பத்தி மற்றும் பகிர்வு ஆதனங்களின் அடிப்படை முகாமைத்துவத்தில் வினைத்திறன் காணப்பட்டதனால் இவ்வருடம் செப்டெம்பர் மாத்தில் வீட்டுப் பாவனையாளர்களின் மின்சாரச் செலவினத்தினை 25 சதவீதத்தினால் குறைப்பதற்கு முடியுமாக இருந்தது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், உணவுச்சாலைகள் மற்றும் சிறிய கடைகளின் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக மாதமொன்றுக்கு 300 அலகுகளைவிட குறைவாக பயன் படுத்தும் கைத்தொழில்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணத்தையும் 25 சதவீதத்தினால் குறைப்பதற்காக தனியான கட்டண முறையொன்றினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

2014 நவம்பர் மாதத்திலிருந்து ஏனைய அனைத்து கைத் தொழில்களுக்கும் 15 சதவீத மின் கட்டண கழிப்பனவினை மேலும் முன்மொழிகின்றேன்.

எரிபொருள் இறக்குமதிகளை குறைப்பதற்கும், சுற்றாடல் நட்பு வாழ்க்கை முறையினை ஊக்குவிப்பதற்குமாக மின்சார கார்கள் அனைத்துக்குமான சுங்க அடிப்படை வரிகளை 25 சதவீதத்தினால் குறைப்பதற்கும் முன்மொழிகின்றேன்.

**ரணவிரு பெற்றார் நன்றி பாராட்டல்**

எமது தாய் நாட்டிற்கு விடுதலை பெற்றுக் கொடுத்த எமது இராணுவப் படையில் தமது பிள்ளைகளை சேர்த்த பெற்றாரினை பாராட்டி வாழ்த்தும் வகையில் எமது படைவீரர்களின் பெற்றார் ஒவ்வொருவருக்கும் 750 ரூபாவினை மாதாந்த கொடுப்பனவாக வழங்கியுள்ளது.

இந்த கொடுப்பனவினை மாதத்திற்கு 1,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மேலும், 2015 ஜனவரியிலிருந்து இக்கொடுப்பனவினை பொலிஸ மற்றும் சிவில் பாதுகாப்பு சேவை படையினரின் பெற்றாருக்கும் விரிவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**யூலை வேலை நிறுத் தக்காரர்களுக்கான நிவாரணம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, 2013 வரவு செலவுத்திட்டத்தில் 1980 யூலை மாதத்தில் 10 ரூபா சம்பள அதிகரிப்பினைக் கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தனியார் மற்றும் அரசாங்கத் துறையினைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட இதற்கு முன்னர் நட்ட ஈடு எதனையும் பெற்றிராத 65 வயதைக் கடந்த ஒவ்வொருவருக்கும் ரூபா 5,000 இனை மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவாக நான் வழங்கினேன்.

இக்கொடுப்பனவினை 2015 ஜனவரியிலிருந்து ரூபா 6,000 ஆக அதிகரிப்பதற்கும் வயது எல்லையினை 63 ஆக குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

இதனை அத்தகைய வேலை நிறுத்தககாரர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்கும் விரிவாக்குவதற்கு நான முன்மொழிகின்றேன்.

இலங்கை பொலிஸ் சேவை

இலங்கை பொலிஸ் சேவையானது அதிகூடிய வாகன நெருக்கடி, குற்றச செயல்கள், வரி மற்றும் நிதி மோசடிகள், சட்ட ரீதியற்ற மதுபானம், போதைப் பொருள் வியாபாரம் மற்றும் விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களில் சிவில் பாதுகாப்பு பொறுப்புக்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை முன்னேற்றகரமாக மேற்கொண்டு வருகின்றது.

இப்பின்னணியில், புதிய ஆட்சேர்ப்பு, பயிற்சி, பதவியுயர்வு மறறும் அவர்களது சேவைக் கொடுபபனவுகள் என்பன திருத்தப்பட்டுள்ளன.

வாகனப் போக்குவரத்து பொலிஸ் சேவையினை மிகவும் வினைத்திறன் மிக்கதாக தரமுயர்த்துவதற்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸ் கல்வி நிறுவகத்தினை உயர் தொழில் திறமைகளை விருத்தி செய்யும் வகையில் சகல வசதிகளுடன் விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பில் பணியாற்றுகின்ற பொலிஸ் அலுவலர்களின் வீடமைப்பு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பாரிய கொழும்பு பிரதேசத்தில் 3 புதிய வீடமைப்பு தொகுதிகளை நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

போதிய வதிவிட வசதிகள் இல்லாமல் பொலிஸ் நிலையங்களில் காணப்படும் தங்குமிட வசதிக் குறைபாட்டினை நீக்குவதற்கு தமது வதிவிட மாவட்டங்களுக்கு வெளியே நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்களுக்கான வதிவிட வாழ்க்கைச்செலவு கொடுப்பனவினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஒவ்வொரு பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் சார்ஜன்ட்மாருக்கு 50,000 ரூபா சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

பொலிஸ் சேவை நிர்வாகத்தினை உறுதிப்படுத்துவதற்கும் சேவையினை அடிப்படையாகக் கொண்டு சம்பள கட்டமைப்பினை உருவாக்குவதற்கும் தனியான சேவைப் பிரமாண குறிப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**முப்படையினரினதும் ஆற்றல் விருத்தியினை உறுதிப்படுத்தல்**

இலங்கை முப்படையினரும் தேசியப் பாதுகாப்பினை வழங்குவதில் சிறந்த செயலாற்றுகையினை வழங்கியுள்ளதுடன் அவர்களது நடத்தையில் சிறந்த தரத்தினையும் பேணி வருகின்றனர்.

விடுதலைப் புலி இயக்கத்தினரை முறியடிப்பதில் ஏறக்குறைய 30 வருடங்களாக அர்ப்பணிக்கப்பட்ட மனிதவள மற்றும் நிதி வளங்கள் நவீன சூழலில் சமாதானத்தின் போதான பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கு தேவையான அத்துறையின் உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய தேவையான வளங்களை அபிவிருந்தி செய்ய முடியாதாக்கியது.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமாதானத்திற்கு கடல். வான் மற்றும் தரை பாதுகாப்பினை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முப்படையினரினதும் ஆற்றல் விருத்தி செய்யப்படுவது அவசியமானதாகும்.

எனவே, எமது நாட்டினை 2020 இல் உயர் நடுத்தர வருமானப் பொருளாதாரமொன்றாக மாற்றும் அதேவேளை முப்படையினருக்கும் தேவையான உட்கட்டமைப்பு, சேவை வழங்கல் மற்றும் உயர் தொழில் திறமை என்பவற்றினை அபிவிருத்தி செய்வதற்காக 2015 -16 இல் மூலதனச் செலவினமாக ரூபா 10 பில்லியனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

முப்படையினருக்கும் வெளிநாட்டுப் பயிற்சி வசதிகளை அதிகரிப்பதற்கும் 2015 சனவரியிலிருந்து புதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு திட்டமொன்றினை செயற்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

முப்படையினைச் சேர்ந்தவர்களினது குடும்ப சூழலினை முன்னேற்றுவதற்கு அவர்களது மூன்றாவது குழந்தை பிறப்பிற்காக வழங்கப்பட்ட மானியமான ரூபா 100,000 இனை மேலும் 3 வருடங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

இந்த மானியம் பொலிஸ் சேவையில் கடமையாற்றுபவர்களுக்கும் விரிவாக்கப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையற்ற அடிப்படையில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கப்படும்

## வாசுதேவ நாணயக்கார அறிவிப்பு

**நிபந்தனையற்ற அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கப்படும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். மல்வில சர்வோதய கட்டடத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி முறைமை முழுக்க முழுக்க சரியானது என்பதன் அடிப்படையில் ஆதரவளிக்கத் தீர்மானிக்கவில்லை.

ஜனாதிபதியினால் ஆற்றப்பட்ட சேவைகள், எதிராக போட்டியிடும் சக்திகளின் தீய உள் நோக்கங்கள் போன்றன குறித்தும் கவனம் செலுதப்பட வேண்டும்.

ஜனாதிபதி முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதனை இந்த தேர்தலிலும் எதிர் வரும் காலங்களிலும் நாம் வலியுறுத்துவோம்.

காலனித்துவத்திற்கு எதிரான, தேசிய சுதந்திரத்தைப் போற்றும் ஜனாதிபதி மகிந்தவிற்கே ஆதரவளிக்கின்றோம்.

தேசிய சமாதானத்தை நிலைநாட்ட இன்னமும் அவகாசம் காணப்படுகின்றது.

ஜனாதிபதியின் வெற்றிக்காக இந்த நாட்டின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்படுவோம் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



எனினும் இடதுசாரி கட்சிகள் பல ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது குறித்து இன்னமும் உறுதியான தீர்மானங்களை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாலியல் குற்றச்சாட்டு விசாரணை அவசியம்

இலங்கையின் மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனைகளிடம் பாலியல் இலஞ்சம் பெற முனைந்ததாக கூறப்படும் அதிகாரிகள் குறித்து விசாரணைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. கோரியுள்ளது. ஜே.வி.பியின் பெண்கள் பிரிவு இந்தக் கோரிக்கையை விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் விடுத்துள்ளது. ஜே.வி.பி பெண்கள் அணியின் உதவித் தலைவர் சமன்மாலி குருசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படாவிட்டால், அது மகளிர் கிரிக்கெட் துறையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்று சமன்மாலி சுட்டிக்காட்டியுள்ளார். கிரிக்கெட் மற்றும் ஏனைய விளையாட்டுக்கள் இலங்கைக்கு கீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்தநிலையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அந்த கீர்த்தியை பாதிக்கும் என்றும் சமன்மாலி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வடக்கு அதிவேக நெடுஞ்சாலை 14 ஆம் திகதி அடிக்கல் நாட்டும் விழா

வடக்கின் அதிவேகப்பாதைக்கான அடிக்கல்லை எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டி வைக்கவுள்ளதாக துறைமுக பெருந்தெருக்கள் கப்பற்றுறை திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார். 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வடக்கின் அதிவேகப் பாதையின் செங்கடகல வாயிலை கலகெதரவிலும் முற்பகல் 10.30 மணிக்கு ரம்புக்கணையிலும் பிற்பகல் 2 மணிக்கு கலேவெல வாயிலிலும் அடிக்கல் நாட்டப்படும். 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு குருநாகல் எதுகல் பிரவேச வாயிலின் அபிமன் வாயிலுக்கு அருகிலும் அடிக்கல் நாட்டப்படவுள்ளது. இப்பாதை நிர்மாணிக்கப்பட்ட பின் கொழும்பிலிருந்து கண்டிக்கும் கொழும்பிலிருந்து தம்புள்ளைக்கும் ஒன்றரை மணி நேரத்தில் பயணிக்க முடியும். (இ-5)

## அடி வாங்கும் புன்னகை!

**வா**ழ்வின் பாதிப் பிரச்சினைகளை சரிசெய்வதும், உறவுகளுக்குள் சிறு பிரச்சினை என்றால், முதலில் அடிவாங்குவதும் புன்னகைதான். உறவுகளில் மட்டுமல்ல, உடலுக்குள்ளே பிரச்சினை என்றால் கூட புன்னகைக்குத்தான் முதலில் பாதிப்பு என்கிறது பல் மருத்துவம். பற்களை சரியாகக் கவனித்துக் கொண்டாலே, தோல் நோய் முதல் இதய நோய் வரை தப்பித்துவிடலாம் என்று அக்கறையாக எச்சரிக்கிறார் வைத்தியர் ஜமுனா உதயராஜா.

பல்லில் ஒரு பிரச்சினையும் இல்லை, வலிக்கக்கூட இல்லை, ஆனாலும் அந்த வைத்தியர் எதுக்காக உங்களைப் பார்க்க சொன்னார்? என்கிற கேள்விகளோடு வருபவர்களைத் தொடர்ந்து சந் திக்கிறார் வைத்தியர் ஜமுனா.

கடந்த வாரம் ஒரு பெண் என்னிடம் வந்தார். உடல் முழுக்க அரிப்பு, தடிப்பு வந்து இரண்டு வாரமாக கஷ்டப்படுறதா சொன்னாங்க. "பூரான் கடிச்ச மாதிரியே இருக்கு வைத்தியர், அலர்ஜிக்கு மாத்திரை சாப்பிட்டும் சரியாகலைனு புலம்பினாங்க. வைத்தியர் அவங்களுக்கு பிரச்சினை தோலல இல்லை, பல்லுலதான்னு தெரிஞ்சு என்னிடம் அனுப்பிருந்தார். தோல் அரிப்புக்கு எதுக்காக பல் வைத்தியர் என்று அவங்களுக்குப் புரியலை.

அவர் வாயை பரிசோதித்த போது, சில இடங்களில் பல்லிலிருந்து வீக்கமும், இரத்தக் கசிவும் இருந்தது. பற்களைத் தாங்கிப் பிடிக்கும் எலும்பு அடர்த்தி குறைந்தும் இரண்டு கடைவாய்ப் பற்களின் வேர்ப் பகுதியில் ஆழமான சொத்



தையும் இருந்தது தெரிந்தது. நான்கு கடைவாய்ப் பற்கள் எலும்பின் ஆழத்தில் கோணலாகவும் இருந்தது. ஆனால் அவருக்கு இது வரை பல் வலி இல்லாததால், இந்தப் பிரச்சினை தெரியவில்லை. பல்லில் இருந்து இரத்தம் வந்ததை அவர் பெரிய விடயமாகக் கருதவில்லை. அந்தப் பெண்ணுக்கு வாயில் நோய்த்தொற்று ஏற்பட்டிருப்பதால்தான் உடல் அரிப்பு ஏற்பட்டிருந்தது. இரண்டு வாரங்களில், அவரது பல் தொற்றுக்கு சிகிச்சை முடிந்து, அவரது பல் பிரச்சினைகள் சரி செய்யப்பட்டதும் அவரது தோல பிரச்சினை தானாகவே சரியாகி விட்டது. பல்லில் சிகிச்சை எடுத்தா, தோல் நோய் எப்படி சரியாப் போகும்னு நம்ப முடியாமத்தான் இங்க இரு ந்து போனாங்க" என்று சிரிக்கிறார் வைத்தியர்ஜமுனா.

உடல் ஆரோக்கியத்தில், வாய் சுகாதாரம் மிக முக்கியம். பற்கள், ஈறுகளில் பிரச்சினை என்றால், உடலின் பல்வேறு பகுதிகளையும் பாதிப்புக்கு உள்ளாக்கிவிடும். எல்லாப் பிரச்சினைக்கும் வேர், பல்லாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் பற்களை சுத்தமாக வைத்திருப்பதும், அடிக்கடி பரிசோதிப்பதும், பெரிய பிரச்சினைகளைத் தவிர்க்கும்!

**பல்லைப் பார்த்துச் சொல்லிவிடலாம்!**

பல் கூச்சம், பல் சொத்தையினாலும் எனாமல் போவதாலும் ஏற்படும். ஈறுகளில் இரத்தக்கசிவு மற்றும் வீக்கம், ஈறுகளில் அழுக்கு சேர்வதால் வரும் வாய் துர்நாற்றம், ஈறு நோய்கள் மற்றும் வயிற்றில் ஏதேனும் பிரச்சினை.

**பல்லால் வருமே பாதிப்பு!**

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு, பற்களில் அல்லது ஈறுகளில் பிரச்சினை இருந்தால், இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக இருக்கும். பல் பிரச்சினையை சரிசெய்தால், சீனி குறைய வாய்ப்பு இருக்கிறது.

கடைவாய்ப் பற்கள் சொத்தையாகவோ, கோணலாகவோ இருந்து, அவை பிடுங்கப்படுவது சில சமயங்களில் தலைவலிக்குத் தீர்வாக அமையலாம்.




பல் மற்றும் ஈறு நோய் உள்ளவர்களுக்கு, இரத்தத்தில் கிருமிகள் அதிகரிப்பதால், "சப் அக்யூட் பாக் டீரியல் எண்டோகார்டிட்டிஸ்' (Sub Acute Bacterial Endocarditis) என்ற இதய நோய் வருவதற்கு அரிதாக வாய்ப்புள்ளது.

காரணம் தெரியாத மூட்டுவலிக்கும், கண்களின் பிரச்சினைக்கும் பற்கள் பல நேரங்களில் காரணமாக இருக்கலாம்.

கர்ப்பிணி பெண்கள், குறைப் பிரசவத்தைத் தவிர்க்க, பல் வைத்தியரை பார்த்து சிகிச்சை எடுப்பது அவசியம்.

**பல் துலங்க பளிச்' டிப்ஸ்**

வாய் சுகாதாரத்துக்கு மிகவும் முக்கியம் பல் துலக்குதல். முடிந்தால், ஒவ்வொரு முறையுமே சாப்பிட்டதும் துலக்குதல் மிகவும் நல்லது.

பல் துலக்கும்போது, மேலிருந்து கீழாகத் துலக்கவேண்டும். இடவலமாகத் தேய்க்கக் கூடாது.

ஓவர் பிரஷ்ஷிங் கூடாது. எனாமல் போய்விடும். ஒன்று அல்லது இரண்டு நிமிடங்கள் துலக்கினால் போதுமானது.

பல்லிடுக்கில் ஏதாவது சிக்கிக் கொண்டால், எதையாவது வைத்துக் குத்தாமல், ஃப்ளாஸ்' எனப்படும் நூல் கொண்டு சுத்தம்செய்யவேண்டும்.

மென்பானங்கள், இனிப்புப் பண்டங்கள், பல்லில் ஒட்டிக்கொள்ளும் உணவுப் பொருட்கள், சொக்லேட், ஐஸ்கிறீம் போன்றவற்றைத் தவிர்த்து, நிறைய காய்கறி, பழங்கள் சாப்பிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள் யாரும் காலில் விழக்கூடாது

## பிரதமர் மோடி உத்தரவு

பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் தனது அமைச்சரவையை விரிவாக்கம் செய்தார். புதிதாக 21 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றனர். இதனால் மோடி அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது.

முன்னதாக நேற்று முனதினம காலை புதிதாக அமைச்சர்களாக பதவி ஏற்க உள்ளவர்களை பிரதம்ர் நரேந்திரமோடி தன் வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அதன் பேரில் 21 பேரும் மோடியின் வீட்டுக்கு சென்றனர்.

அவர்களுக்கு பிரதமர் மோடி காலை நேர விருந்து கொடுத்தார். சாப்பிட்டுக் கொண்டே 21 பேரிடமும் மோடி, அரசு நிர்வாகம் குறித்து விவாதித்தார்.

விருந்து முடிந்ததும் 21 பேரிடமும் மோடி சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர், "உங்களுக்கு ஒதுக்கப்படும் அமைச்சுப் பணிகளில் நீங்கள் உங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொளள வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இந்த சந்திப்பின் போது சிலர் பிரதமர் நரேந்திர மோடி காலைத் தொட்டு வணங்கி ஆசி பெற்றனர். அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த மோடி "நீங்கள் என் காலில் விழுவதை நான் விரும்பவில்லை" என்றார்.

பிறகு, "நீங்கள் இன்று மதியம் அமைச்சராக பதவி ஏற்ற பிறகு என் காலில் விழக்கூடாது. உங்களிடம் இருந்து நான் திறமையான நிர்வாகம் ஒன்றையே எதிர் பார்க்கிறேன்" என்றார்.


பிரதமர் நரேந்திரமோடியின் இந்த உத்தரவை நேற்று முன்தினம் புதிதாக பதவி ஏற்ற 21 அமைச்சர்களும் கடைப்பிடித்தனர். 21 அமைச்சர்களும் பதவி பிரமாணம் முடிந்த பிறகு மோடியை கைகூப்பி வணங்கினார்கள். யாரும் அவர் காலில் விழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மகிந்த அரசாங்கத்தை கண்டித்து விஜய் ரசிகர்கள் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் 5 பேருக்கு தூக்கு தண்டனை விதித்த இலங்கை அரசை கண்டித்து விஜய் ரசிகர்கள் உண்ணாவிரதப் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினர. இராமேஸ்வரத்தைச் சேர்ந்த எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லாங்லெட் ஆகியோர் கடந்த 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் போதைப் பொருள் கடத்தியதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசா ரணை நடந்தது. இந்நிலையில் அவர்களுக்கு தூக்கு தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதி மன்றம் கடந்த மாதம் 30ஆம் திகதி தீர்ப்பளித்தது. இதை கண்டித்து தமிழக மீனவர்கள் தொடர் போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள். இந்த பிரச்சனை பற்றி தமிழ் திரையுலகினர் கண்டு கொள்ளாதது ஏன் என்ற கேள்வி எழுந்தது. இந் நிலையில் விஜய் ரசிகர்கள் தமிழக மீனவர்களின் தூக்கு தண்ட னையை எதிர்த்தும், இலங்கை அரசை கண்டித்தும் மதுரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் அண்ணாத்துரை எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். மேலும் மீனவர்களை விடுதலை செய்யக் கோரியும், அரசை கண்டித்தும் புதுக்கோட்டையில் விஜய் ரசிகர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (இ-5)





# போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறினால் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது

## பாகிஸ்தானுக்கு இந்தியா கடும் எச்சரிக்கை

பாகிஸ்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்தால், அந் நாட்டுடன் பேச்சு நடத்த முடியாது என்று இந்தியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக டில்லியில் மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி கூறியதாவது, பாகிஸ்தான் தொடர்ந்து போர் நிறுத்த ஒப்பந்த விதி மீறலில் ஈடுபட்டால், அது பேச்சு நடத்துவதற்குரிய சூழ்நிலையை சீர் குலைத்துவிடும்.

பேச்சு நடத்த வேண்டும் என்று தான் நாங்கள் விரும்புகிறோம். அதற்கான சூழ்நிலையை இரு நாடுகளும் சேர்ந்துதான் ஏற் படுத்த வேண்டும். அதில், ஒரு தரப்பு மட்டும் மோசமான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, பேச்சு ஏன் நடைபெறவில்லை என்று கேட்பது எப்படி சரியாக இருக்கும்.



பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் இரு நாடுகளின் வெளியுறவுத் துறை செயலாளர்கள் நிலையிலான பேச்சுவார்த்தைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தோம். ஆனால், பாகிஸ்தானோ, பிரிவினைவாதகளுடன் பேச்சு நடத்தியது. விரைவில் காஷ்மீரில் தேர்தல் நடைபெற விருந்த சூழ்நிலையில் அவர்கள இச் செயலில் ஈடுபட்டனர். இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

காஷ்மீரில் அமைதியான சூழ்நிலையை சீர்குலைக்க முயற்சி நடக்கிறது. ஆனால், எங்களைப் பொறுத்தவரை அங்கு அமைதியான முறையில் தேர்தல் நடைபெறும் என்று நம்புகிறோம்.

சமீபத்தில் அந்த மாநிலத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டபோது, நமது இராணுவம் துரிதமாக செயற்பட்டு மீட்புப் பணிகளை திறம்பட மேற்கொண்டது.

**சீனாவுடன் பேச்சு?**

சீனாவுடனான நமது வர்த்தக உறவு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இரு நாடுகளிலும் பரஸ்பரம் முதலீடுகள் அதிகரித்துள்ளன. மிகப்பெரிய அளவில் வர்த்தகம் நடைபெறுகிறது.

ஆனால், எல்லைப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண கடந்த 2003 ஆம் ஆண்டு ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையம் விரைந்து செயற்பட்டு தீர்வு காணும் என்ற நம்பிக்கை உள்ளது. சீனாவுடன் ஆக்கபூர்வமான பேச்சு நடத்த தயாராக உள்ளோம். இவ்வாறு அருண் ஜெட்லி மேலும் தெரிவித்தார். (இ-5)




# 21 அமைச்சர்கள் பதவியேற்பு சிவ சேனா திடீர் புறக்கணிப்பு

## பா.ஜ.கவுடன் மோதல் முற்றுகிறது

(சென்னை)

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் விரிவாக்கம் செய்யப்பட்டது. நான்கு அமைச்சர்கள், 17 இணை அமைச்சர்கள் புதிதாகப் பதவியேற்றனர். அவர்கள் 21 பேருக்கும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு அமைச்சரவை விரிவாக்கத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

கோவா முன்னாள் முதல்வர் மனோகர் பாரிக்கர், சிவசேனா முன்னாள் நிர்வாகி சுரேஷ் பிரபு, பா.ஜ.க. மத்திய தேர்தல் குழுவின் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான ஜகத் பிரகாஷ் நட்டா, அரியானாவைச் சேர்ந்த சவுத்ரி வீரேந்தர் சிங் ஆகிய 4 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர்.



**இணை அமைச்சர்கள் (தனிப் பொறுப்பு)?**

பண்டாரு தத்தாத்ரேயா, ராஜீவ் பிரதாப் ரூடி, டாக்டர் மகேஷ் சர்மா ஆகியோர் தனிப்பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்களாக பதவியேற்றனர்.

**இணை அமைச்சர்கள்**

முக்தார் அப்பாஸ் நக்வி, ராம் கிருபாள் யாதவ், ஹரிபாய் பார்திபாய் சவுத்ரி, சன்வர் லால் ஜாட், மோகன்பாய் கல்யாண்ஜிபாய் குண்டாரியா, கிரிராஜ் சிங், ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர், பேராசிரியர் ராம் சங்கர் கத்தாரியா, வை. எஸ்.சவுத்ரி, ஜெயந்த் சின்ஹா, ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், பாபுல் சுப்ரியா, சாத்வி நிரஞ்சன் ஜோதி, விஜய் சாம்ப்லா ஆகியோர் இணை அமைச்சர்களாகப் பதவி ஏற்றனர்.

இணை அமைச்சர்களில் ராம் கிருபாள் யாதவ் தவிர மற்ற அனைவரும் முதல்முறையாக மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாகி உள்ளனர்.

கூட்டணிக் கட்சியான தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த வை.எஸ். சவுத்ரிக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

**பாஜக-சிவசேனா மோதல் முற்றுகிறது?**

சிவசேனா சார்பில் மத்திய அமைச்சரவைக்கு அனில் தேசாய் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். ஆனால் சிவசேனா கேட்ட அமைச்சர வையை அவருக்கு ஒதுக்க மத்திய அரசு மறுத்துவிட்டதாகக் கூறப் படுகிறது. இதனால் அவர் அமைச்சராக பொறுப்பேற்கவில்லை. டில்லியில் தங்கியிருந்த அனில் தே சாயை உடனடியாக மும்பை திரும்பும்படி சிவசேனா தலைமை உத்தர விட்டது.

சிவசேனா மூத்த தலைவர் சுரேஷ் பிரபு மக்களவைத் தேர்தலில் தோல்வியடைந்தவர் என்பதால் அவரது பெயரை சிவசேனா பரிந்துரைக்கவில்லை. ஆனால் அவர் மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சரவை பதவியேற்புக்கு சில மணி நேரத்துக்கு முன்பு அவர் பாஜகவில் இணைந்தார். அவர் பாஜக சார்பில் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிகிறது.

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல் முதல் இருகட்சிகளுக்கும் இடையே விரிசல் அதிகரித்து வருவதாக அரசியல் விமர்சக்கர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# மீனவர்களினை மீட்பதில் மோடி தீவிரமாகவுள்ளார்

## பொன்.ராதா கிருஷ்ணன் தெரிவிப்பு

தூக்கு தண்டனை பெற்று இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் 5 பேர் நிலை குறித்து, பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதுகுறித்து மத்திய இணை அமைச்சர் பொன்.ராதா கிருஷ்ணன் கூறியதாவது,

தூக்கு தண்டனை பெற்ற தமிழக மீனவர்கள் 5 பேர் இலங்கை சிறையில் உள்ளனர். இவர்களை வழக்குகளில் இருந்து விடுவிப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் இதற்கான தீவிர ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். அதே நேரத்தில் 5 மீனவர்களையும் தமிழக சிறைக்கு கொண்டு வர இராஜதந்திர ரீதியிலான முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்து வருகிறது.

இது தொடர்பான அதிகாரபூர்வமான தகவல் இன்னும் வெளியிடப்படவில்லை. இவ்வாறு பொன். ராதா கிருஷ்ணன் மேலும் தெரிவித்தார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையின் பட்டமளிப்பு விழா நேற்று ஆரம்பம்






யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 30 ஆவது பொது பட்டமளிப்பு விழா நேற்றைய தினம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமான போது... (படங்கள்:- உ.சாளின்)














# இலங்கை அரசைக் கண்டித்து சட்டத்தரணிகள் போர்க்கொடி

போதைப் பொருள் கடத்தல் வழக்கில், இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை கொழும்பு நீதிமன்றம் கடந்த சில நாட்களுக்கு முன்பு மரண தண்டனை விதித்தது.

இதை கண்டித்தும், இலங்கை நீதித்துறை இன வெறியோடு, தமிழர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு தீர்ப்பினை வழங்கியுள்ளது. இந்தத்தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டும். தண்டனையைப் பெற்ற மீனவர்களுக்கு பிற வகை உதவிகளை செய்யவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம், பெண் சட்டத்தரணிகள் சங்கம் தமிழ்நாடு இளம் வழக்கறிஞர் மன்றம் ஆகிய அமைப்புகள் நீதிமன்ற புறக்கணிப்புபோராட்டத்தில்ஈடுபட்டனர்.

உயர் நீதிமன்ற சட்டதரணிகள் சங்கத்தின் தலைவர் கினி மானுவேல், செயலாளர் அறிவழகன் ஆகியோர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் இலங்கையை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

பின்னர், நீதிமன்ற வளாகத்தில் ஊர்வலம் வந்து, ஒவ்வொரு அறைகளுக்கும் சென்று கோஷங்களை போடடனர். தலைமை நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தலைமையிலான முதன்மை பரிவு [illegible] போது, அவர்களுக்கு தலைமை நீதிபதி [illegible] கண்டனம் [illegible] தெரிவித்தார்.




பின்னர், சட்டத்தரணிகள் ஊர்வலமாக வந்து, நீதிமன்ற நுழைவாயில் அருகே வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதேபோல், பெண்கள் சட்டத் தரணிகள் சங்கத் தலைவர் வி.நளினி தலைமையில், துணை தலைவர் ஆதி லட்சுமி லோகமூர்த்தி, செயலாளர் என்.எஸ்.ரேவதி, முன்னாள் தலைவர் டி.பிரசன்னா உட்பட ஏராளமான பெண சட்டத்தரணிகள்சென்னைஉயர் நீதிமன்றம் ஆவின் பூத் அருகே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அப்போது, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சேவையையும், இலங்கை நீதித்துறையையும் கண்டித்து கோஷங்கள் போட்டனர். சட்டத்தரணிகள் நடத்திய இந்த போராட்டத்தினால், வழக்குகள் விசாரணை பாதிக்கப்பட்டிருந்தது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 நாட்களில் 1000 பேர் பலி

## சிரியாவில் சம்பவம்



சிரியாவில் கோபேன் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கும், குர்திஷ் .பாதுகாப்புப் படையினருக்கும் இடையே 50 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வரும் போரில் ஆயிரத்து 13 பேர் உயிரிழந்துள்ளனர்.


சிரியாவின் கோபேன் (அய்ன் அல் அராப்) நகரை கைப்பற்ற கடும் தாக்கு தலை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாத அமைப்பு நடத்தி வரு கிறது.

அவர்களை தடுத்து நிறுத்த குர்திஷ் படையினர் கடுமையாக போராடி வருகின்றனர்.

இந்த தாக்குதலில் இது வரை ஆயிரத்து 13 பேர் கொல்லப்பட்டதாக சிரியாவில்உள்ள மனித உரி மைகள் கண காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் 609 பேர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள், 363 பேர் குர்திஷ் மக்கள் என்று மனத உரிமை அமைப்பின் இயக்குநர்ரமி அபதெல் ரஹ்மான தெரிவித்தார். (இ-5)

## விமான விபத்தில் 9 பேர் உயிரிழப்பு




பகாமாசில் தலைநகர் நஸ்ஸாவில் இருந்து லியர் ஜெட் என்ற சிறிய ரக விமானம் கிராண்ட் பகாமா நோக்கி சென்றது. இந்த விமானத்தில் பிரபல பாதிரியார் மைலஸ் முன்றோ, அவரது மனைவி ரோத் உட்பட 9 பேர் பயணம் செய்தனர். நஸ்ஸாவில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட விமானம், கிராண்ட் பகாமாவில் உள்ள கப்பல் விமான தளத்தில் தரை இறங்கியது. அப்போது திடீரென கப்பல் தளத்தில் இருந்த கிரேன் மீது விமானம் பயங்கரமாக மோதி தீப்பிடித்து எரியத்தொடங்கியது. இதில் விமானத்தில் இருந்த 9 பேரும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். விமானம் விபத்துக்குள்ளானதற்காக காரணம் உடனடியாக தெரியவில்லை. இதுகுறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் என்று விமான துறையினர் தெரிவித்தனர்.

விபத்து நடைபெற்ற இடத்தில் பொலிஸாரும், தீயணைப்பு துறையினரும் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். விபத்தில் உயிரிழந்த பாதிரியார் மைலஸ் முன்றோ பகாமாஸ் நாட்டில் பிரபலமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மனித வெடிகுண்டுத்தாக்குதலில் மாணவர்கள் 48 பேர் உயிரிழப்பு

### நைஜீரியாவில் பயங்கரம்







நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள யோபே மாநில தலைநகரான பொட்டிஸ்கும் நகரில் உள்ள கல்லூரியில் நேற்று நிகழ்ந்த மனித வெடிகுண்டு தாக்குதலில் 48 மாணவர்கள் பலியாகினர்.

அங்குள்ள தொழில்நுட்ப அறிவியல் கல்லூரியில் உள்ள பிரார்த்தனைக் கூடத்தில் நேற்று காலை வாராந்த பிரார்த்தனைக கூட்டம் நடைபெறறது.

அப்போது, அங்குவந்த ஒருவன் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் 48 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். கை, கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் 50இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில்சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

இதே பொட்டிஸ்கும் நகரில் கடந்த வாரம் நடைபெற்ற மனித வெடிகுண்டு தாக்குதலில் 30 பேர் பலியானது நினைவிருக்கலாம். (இ)

## பொறியியலாளர்கள் ஐவர் சுட்டுக்கொலை



சிரியாவில் அணு ஆராய்ச்சி பொறியியலாளர்கள் 5 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர் என்று அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியா தலைநகர் டமாஸ்கஸ் அருகே பர்சியாவில் அறிவியல் ஆராய்ச்சி மையம் உள்ளது.

இங்கு பணிபுரியும் 5 பொறியியலாளர்கள் நேற்று முன்தினம் ஆராய்ச்சி மையத்திற்கு பேருந்தில் வந்துகொண்டிருந்தனர். அப்போது பேருந்துக்குள் புகுந்த மர்ம மனிதர்கள் கண் இமைக்கும் நேரத்தில் மறைத்து வைத்து இருந்த துப்பாக்கியால் அவர்களை சுட்டு வீழ்த்தினர்.

இந்த தாக்குதலில் 5 பேரும குண்டு பாய்ந்து பரிதாபமாக உயிரிழந்தனர். இறந்தவர்களில் 4 பேர் சிரியாவைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் ஈரான் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. கடந்த ஆண்டு ஜூலை மாதம் இதே ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றிய 6 பேர் சிறியரக பீரங்கி தாக்குதலில் சிக்கி உயிரிழந்தது நினைவு கூரத்தக்கது. சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த தாக்கு தலுக்கும் அவர்கள் காரண மாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (இ-5)

## 8 தீவிரவாதிகள் உயிரிழப்பு

எகிப்தில் தீவிரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையில் 8 பேர் கொல்லப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்தது.

எகிப்தின்வடக்குஸைனாய் பகுதியில் செயற்பட்டு வரும் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடவடிக்கை மேற்கொணடனர். இதையடுத்து, இருதரப்பினருககும் கடும் துப்பாக்கிச் சணடை நிகழ்ந்தது. இந்நிலையில், இராணுவத்தினரின்கனரக ஆயுத வாகனங்கள் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டன. இந்த தாக்குதலில் தீவிரவாதிகளின் வாகனங்கள், அவர்கள் மறைந்திருந்த இடங்கள் ஆகியவை தகர்க் கப்பட்டன.

இந்த நடவடிக்கையின்போது 8 தீவிரவாதிகள் கொல் லப்பட்டனர். மேலும் 13 தீவிரவாதிகள் காயமடைந்ததாக எகிப்து இராணுவம் தெரிவித்தது.கடந்த 2011ஆம் ஆணடு எகிப்தில் ஏற்பட்ட புரட்சியையடுத்து, ஹோஸ்னி முபாரக் ஆட்சி தூக்கியெறியப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்
- திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

## ஓ.பி.எஸ்.தெரிவிப்பு

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களையும் விடுவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழகத்தின் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிங்கள மொழியில் உள்ள தீர்ப்பாணை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, இலங்கை உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

தமிழக மீனவர்கள் சார்பில் ஆஜராவதற்காக, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் சிறந்த சட்ட வல்லுநர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த மேன்முறையீட்டுக்கான செலவுக்காக தமிழக அரசு, 20 இலட்சம் ரூபாயை இந்திய தூதரகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது எனவும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினையை பயன்படுத்தி, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க நினைக்கும் தி.மு.கவின் எண்ணம் நிறைவேறாது என முதல்வர் பன்னீர்செல்வம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வேலி கட்ட பயன்படுத்தும் கம்பியால் நோயாளருக்கு 'பல்கிளிப்' போடப்பட்டது

## போலி வைத்திய நிலையங்களை கட்டுப்படுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல் மிதப்பினைக் கட்டுப்படுத்த தனியார் பற்சிகிச்சை நிலைய மொன்றில் சிகிச்சை பெறச் சென்றவருக்கு வேலி அடைப்பிற்கு பயன்படுத்தப்படும் கம்பியால் பல் கிளிப் போடப்பட்ட சம்பவமொன்று யாழ்.நகரில் இடம்பெற்றுள்ளது.

வேலி அடைப்பிற்கு பயன்படுத்தபடுகின்ற கம்பி குறித்த நோயாளரது பற்களினைப் பாதித்து முரசினை தாக்கியதனால் அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சையை பெற்றுள்ளார்.

யாழ்.நகரில் பல போலி வைத்திய சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருவதாகவும் அது தொடர்பில் நோயாளர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் வைத்தியதுறை சார் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில், குறித்த சிகிச்சை நிலைய ங்களில் போலி வைத்தியர்கள் போலி தாதியர்கள் போலி தொழில்நுட்ப உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர்.

அங்கு வைத்திய சிகிச்சைக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் சுகாதாரமற்றவை.

அண்மையில் போலி சிகிச்சை நிலையம் ஒன்றில் பல் மிதப்புக்கு சிகிச்சை பெற்று பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக வந்திருந்த போது பல் மிதப்புக்காக அவருக்கு போடப் பட்ட கிளிப் வேலி அடைப்பதற்கு பயன்படுத்தும் கம்பி கொண்டு தயாரிக்கப்பட்டது என கண்டறியப்பட்டது.

போலி வைத்தியர்கள் மற்றும் போலி வைத்திய சிகிச்சை நிலையம் தொடர்பில் வட பிராந்திய சுகாதார பணிமனை, வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும். இவ்வாறான சிகிச்சை நிலையங்களில் வைத்தியர்களின் பெயர்களுக்கு முன்பாகவோ அல்லது பெயர்களின் பின்னாலோ பட்டங்கள் எதுவும் இருக்காது. பிரபல வைத்திய நிபுணர்கள் என்றே எழுதி இருப்பார்கள்.

இந்த போலி சிகிச்சை நிலையங்கள் போலி வைத்தியர்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருப்பதன் ஊடாகவே அவர்கள் தம்மை பாதுகாத்து கொள்ளலாம் என மேலும் தெரிவித்தனர்.

அத்துடன் யாழ்.நகர் பகுதியில் பல மருந்தகங்கள் (பாமசிகள்) அனுமதியின்றி இயங்கி வருகின்றன. அவை குறித்தும் அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் வைத்தியசாலை சார் நிபுணர்கள் குறிப்பிட்டனர். (செ-4)

# அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள்

## கூறுகிறார் தயாசிறி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக அரசாங்கத்திற்கு உள்ளிருந்தே செயற்படுபவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என வட மத்திய மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சிக்குள் இருந்து கொண்டே அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் நபர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டவர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய முடியவில்லை.

பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்ய முடியாவிட்டால், சந்திரிகா பண்டாரநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சியினர் போட்டியிடச் செய்வார்கள்.

அவ்வாறு போட்டியிடச் செய்தால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு வேட்பாளர்களுக்கு மக்களினால் வாக்களிக்க நேரிடும் என தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)



# எண்ணெய்க் காப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தலும் நாளை மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் தொடர்ந்து சுவாமி வீதியுலாவரும் காட்சியும் இடம் பெறும். (இ-5)

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை"

–கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மலையையே துளையுங்கள்



- சரியான சிந்தனையும் முறையான பயிற்சியும் பெற்றவர்கள் ஒருபோதும் தவறு செய்யமாட்டார்கள்.
- இரும்பு போல மன உறுதியும், மலைகளைத் துளைத்துச் செல்லும் வலிமையும் கொண்டவராக செயற்படுங்கள்.
- இந்த உலகம் என்னும் பயிற்சிக்கூடத்தில் நம்மை வலிமையுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவே நாம் வந்திருக்கிறோம்.
- சண்டையிடுவதால் பயனில்லை. ஒற்றுமையுடன் வாழ்வதில் தான் முன்னேற்றமே அடங்கியிருக்கிறது.

# கணக்குத் தெரியாத மாணவனும் சரி எடுக்கலாம்

கணக்கியல் (Accounts) என்ற பாடத்தில் மிகச் சிறந்த ஆசானாக விளங்கியவர் அழகேசன். கணக்கியல் சார்ந்த பல புத்தகங்களை எழுதிய பெருமை அவரைச் சாரும்.

ஒரு முறை க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகத் துறையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவன் ஒருவன் கணக்கியலில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தான். அந்த மாணவன் வினாத்தாளில் கேட்கப்பட்ட இலாப நட்டக் கணக்கை செய்யமுற்பட்டான்.

இலாப நட்டக் கணக்குக்குரிய அட்டவணையைத் தயாரித்துவிட்டு வினாத்தாளில் கொடுக்கப்பட்ட பரீட்சை மீதியை இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கத்திலும் செலவுப் பக்கத்திலும் அப்படியே முழுமையாகப் பதிவு செய்தான்.

விடைத்தாளைத் திருத்திய ஆசிரியர் அந்த மாணவன் விடை அளித்த முறையில் வெறுப்பு அடைந்து சிவப்பு பேனையால் ஒரேவெட்டு வெட்டி விட்டார்.

விடைத்தாள் திருத்தும் பணியில் ஆசிரியர் அழகேசன் தலைமை மேற்பார்வையாளராகப் பணியாற்றிருந்தார்.

குறித்த விடைத்தாள் அவரின் கைக்கு வந்த போது, அந்த விடைத்தாளை திருத்தம் செய்த ஆசிரியரை அழைத்தார்.

எதற்காக இந்த விடையை வெட்டினீர்கள் என்று வினாவினார். அதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர் சேர், இந்த மாணவன் பரீட்சை மீதியை அப்படியே வரவுப் பக்கத்திலும் செலவுப் பக்கத்திலும் எழுதியுள்ளான் என்றார்.

ஆசிரியர் கூறியதைக் கேட்ட அழகேசன் பரவாயில்லை, இந்த மாணவன் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டுள்ளான். எனவே பரீட்சை மீதியில் வரவுப் பக்கத்தில் வரவேண்டியதற்குச் சரி போடுங்கள். அதேபோல் செலவுப்பக்கத்தில் வரவேண்டியதற்கும் சரி இடுங்கள் என்றார்.

ஆம், குறித்த மாணவனுக்கு கணக்கியல் அறிவு குறைவாயினும் கணக்குப் பதிவு செய்யும் அடிப்படை அறிவைக் கொண்டுள்ளான். எனவே அவன் தனது அடிப்படை அறிவைப் பிரயோகித்ததன் விளைவாகவே இலாபநட்டக்கணக்கில் வரவு, செலவு என்ற இரு நிரலிலும் பரீட்சை மீதியை அப்படியே பதிவாக்கினான்.

ஆக, கணக்குத் தெரியாத மாணவனும் சரி எடுக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. இந்த மாணவனுக்கு கணக்குத் தெரியாது என்று நினைத்து பிழைபோடுவது மகா தவறு.

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் வருகை தந்திருந்த ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தார். அந்த வேண்டுகோள் முஸ்லிம் மக்கள் மாட்டிறைச்சி உண்ணக் கூடாது என்பதாகும்.

சோபித தேரர் விடுத்த கோரிக்கை மிகவும் முக்கியமானது. முஸ்லிம் மக்கள் மாட்டிறைச்சி உண்ணக் கூடாது என்பதற்கு அப்பால், வட மாகாணத்தில் மாட்டிறைச்சிக் கடைகளை முற்றாக மூடிவிடுவதற்கு முஸ்லிம்கள் உதவ வேண்டும் எனக் கேட்பது பொருத்தமானதாகும்.

வடபகுதியில் மாட்டிறைச்சிக் கடைகள் இயங்குவது சைவ மக்களை அவமானப்படுத்தும் செயலாகும்.

பசுவைத் தாயாகப் போற்றுகின்ற சைவ மக்கள் வாழும் வட பகுதியில் மாட்டிறைச்சி விற்பனை செய்வது என்பது மிகவும் வருந்தத்தக்கது. எனவே வட புலத்தில் மாட்டிறைச்சிக் கடைகளை முழுமையாகத் தடைசெய்வதற்கு பிற சமயங்களும் உதவ வேண்டும். அதிலும் குறிப்பாக முஸ்லிம் மக்கள் உதவுவது கட்டாயம்.


முஸ்லிம் மக்கள் பன்றியை வெறுப்பவர்கள். அவர்கள் வாழுகின்ற பிரதேசத்தில் பன்றி இறைச்சிக் கடையை எந்தச் சமயம் சார்ந்தவர்கள் வைத்திருந்தாலும் அது அநீதியானது. எனவே இதுபோல சைவ மக்கள் பெருமளவில் வாழ்கின்ற வட புலத்தில் மாட்டிறைச்சிக் கடைகளை யார் வைத்திருந்தாலும் அது ஏற்புடையதன்று. ஆகவே வட புலத்தில் மாட்டிறைச்சிக் கடைகளை முற்றாகத் தடை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

ஹெல உறுமயவின் தலைவர் சோபித தேரர் பல பிழைகளை விட்டிருந்தாலும் முஸ்லிம்கள் மாட்டிறைச்சி உண்பதைக் கைவிட வேண்டும் எனக் கேட்டிருப்பது மிகச் சரியான விடையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து; கோவா- மும்பை ஆட்டம் சமநிலை




கோவா- மும்பை மோதிய போட்டி சமநிலையில் முடிவடைந்தது. ஐ.எஸ்.எல். என்று அழைக்கப்படும் 'இந்தியன் சுப்பர் லீக்' காற்பந்து இந்தியாவில் பல்வேறு நகரங்கில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் 24-லீக் போட்டி கோவாவில் உள்ள படோர்டா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கோவா- மும்பை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதல் பாதி ஆட்டத்தில் கோவா அணி வீரர்கள் ஆதிக்கமே அதிக மாக இருந்தது. அந்த அணியின் சுபாஷ் சிங் ஒரு கோல் அடித்தார். ஆனால், அது ஆப்சைடு ஆகியதால் கோல் மறுக்கப்பட்டது. அதன்பின்பும் கோவா அணி வீரர்கள் கோல் அடிக்க முயன்றனர்.

ஆனால் பலன் அளிக்கவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் கோவா அணி வீரர்கள் கையே ஓங்கி இருந்தது. அந்த அணிக்கு 9 கார்னர் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால அதை கோல் ஆக்க அவர்களால் முடியவில்லை. மும்பை அணியின கோல் கீப்பர் சுப்ரதா பால் அருமையாக விளையாடி கோவா அணியினர கோல் போடுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தார். இதனால் இரு அணிகளுமே கோல் அடிக்காமல் ஆட்டம் 0-0 என சமநிலையில் முடிந்தது.

இதுவரை நடைபெற்றுள்ள லீக் போட்டிகளின் முடிவு அடிப்படையில் 7 போட்டிகளில் விளையாடி கொல்கத்தா அணி 12 புள்ளிகள் பெற்று முதல் இடத்திலும், சென்னை அணி 6 போட்டியில் விளையாடி 11 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலும், புனே அணி 6 போட்டியில் விளையாடி 10 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்திலும், மும்பை அணி 7 போட்டிகளில் விளையாடி 10 புள்ளிகளுடன 4ஆவது இடத்திலுமுள்ளது. (க)

## 12 ஆயிரம் ஓட்டங்கள் கடந்து மஹேல புதிய சாதனை



இலங்கை அணிவீரர் மஹேல ஜயவர்தன ஒருநாள் போட்டிகளில் 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார்.

ஐதராபாத்தில் நடைபெற்று வரும் இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான 3 ஆவது ஒரு நாள் போட்டியில் 116 ஓட்டங்களை பெற்ற போது, அவர் இந்த சாதனையை படைத்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த நிலையில் சிறப்பாக விளையாடிய மஹேல, சதம் அடித்தார்.

426 ஒருநாள் போட்டிகளில் விளையாடி மஹேல 17 சதம், 74 அரைச்சதம் அடித்துள்ளார். அதிகபட்சமாக 144 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இவருக்கு முன் ஜெயசூரிய 445 போட்டியில் 13,430 ஓட்டங்களும், சங்கக்கார 383 போட்டியில் 12,918 ஓட்டங்களும் எடுத்துள்ளனர். ஒருநாள் போட்டிகளில் 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 3ஆவது இலங்கை வீரர் மஹேல ஆவார்.

இதேவேளை இந்திய வீரர் டெண்டுல்கர் 463 போட்டிகளில் 18,426 ஓட்டங்கள் எடுத்து முதல் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## மஹேல சதம் தொடரை வென்றது இந்தியா

ஐதராபாத்தில் நடைபெற்ற 3 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தி இந்தியா தொடரைக் கைப்பற்றியுள்ளது. இந்தியா சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 5 போட்டி கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இந்தியா-இலங்கை இடையிலான 3 ஆவது ஒரு நாள் போட்டி ஐதராபாத்தில் உள்ள ராஜீவ்காந்தி ஸ்டேடியத்தில் நடந்தது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. இலங்கை அணி 48.2 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 242 ஓட்டங்கள் எடுத்தது.

இதன் மூலம் இந்திய அணிக்கு 243 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டது.



இலங்கை அணியில் அதிகபட்சமாக ஜெயவர்த்தன 118 ஓட்டங்கள் அடித்தார். அடுத்தபடியாக டில்சான் 53 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணியில் உமேஷ் யாதவ் 4 விக்கெட்டுகளையும், படேல் 3 விக்கெட்டுகளையும், குல்கார்னி, அஸ்வின் ராயுடு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து இந்திய அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்து விளையாடியது.

இந்திய அணி 44.1 ஓவர்களில் 245 ஓட்டங்கள் அடித்து இலங்கையின் இலக்கை தகர்த்தது. இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணியில் ரெகானே 31 ஓட்டங்களும், தவான் 91 ஓட்டங்களும், ராயுடு 35 ஓட்டங்களும், விராட் கோலி 53 ஓட்டங்களும் அடித்து ஆட்டமிழந்தனர். ரெய்னா 18 ஓட்டங்களுடனும், விர்த்திமான் ஷகா 6 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம், 5 போட்டி கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

போட்டியின் ஆட்டநாயகனாக சதம் அடித்த இலங்கையின் மஹேல ஜெயவர்த்தன தெரிவானார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஆளுநர் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி முடிவுகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இப் போட்டிகளில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 24 அணிகள் பங்குபற்றுகின்றன.

போட்டிகள் கடந்த சனிக்கிழமை காலை வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டரங்கில் ஆரம்பமாகின.

இதில் இடம்பெற்ற போட்டிகள் விபரம் வருமாறு,

கரவை சுடர் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக்கழகம் மோதிய போட்டியில் 1:0 என்னும் கோல் அடிப்படையில் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.



இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோத இருந்த போட்டியில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் உரிய நேரத்திற்கு போட்டிக்கு சமுகம் தராமையால் கருணாகரன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.


சிவகுமாரன் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம் மோதிய போட்டியில் 2:1 என்னும் கோல் அடிப்படையில் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் நியூட்டன் விளையாட்டுக் கழகம் மோதிய போட்டியில் 3:1 என்னும் கோல் அடிப்படையில் உடுப்பிட்டி இளைஞர் விளையா ட்டுக் கழகமும் அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதிய போட்டியில் 1:0 என்னும் கோல் அடிப்படையில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றன.

றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோத இருந்த போட்டியில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் அன்பாலயம் விளையாட்டுக் கழகம் ஏதிர் செஞ்சுடர் விளையாட்டுக் கழகம் மோதுவதாக இருந்த போட்டியில் அன்பாலயம் விளையாட்டுக் கழகமும் சுடரொளி விளையாட்டுக் கழகம் எதிர் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் மோதுவதாக இருந்த போட்டியில் இமையாணன் மத்தி விளையா ட்டுக் கழகமும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா



வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா அவர்கள் நேற்று 10.11.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை சிசிலியா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பெர்ண பேத்தம்மா அவர்களின் பாசமிகு கணவரும், புலோமினம்மா, மலர், மணியம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற புஸ்பம் மற்றும் பாலன், பற்றிமா (லண்டன்), வைலற், வதனா, மங்களம், குமார் (லண்டன்), யோகராசா (லண்டன்), ஜெனிபேட் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-யாழ்ப்பாணம்), றூபேட் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராசா, றஞ்சிதம், பெரிய ராசா (லண்டன்), றொபேட், யோண் லோறன்ஸ், காலஞ்சென்ற அன்ரனி மற்றும் ரவீந்திரா (லண்டன்), கவிதா (லண்டன்), மொறின், டொறின் ஆகியோரின் அன்பு மாமனாரும்

றூபன்-ஜெனுசியா, தயாநேசன்-வொறிண்டா, டொறின்டா, வினோத், ஸ்ரீபன், ஜெப்தா-ஷனோகா (லண்டன்), றஷல்-ஷர்ணியா (லண்டன்), நிஷாந் (லண்டன்), மைக்சன், ஜெனி, டிலக்ஸ்சன், யசிக்கா, சுலக்சன், அலெக்ஸ், காலஞ்சென்ற அனுசியா மற்றும் ஜான்சி, சர்மியா, நிறோஜினி (லண்டன்), சிமோனா (லண்டன்) செறினா (லண்டன்) ஜெசன் (லண்டன்), றெபேக்கா (லண்டன்), றொசான் (லண்டன்), ஜெய்ஷாந், அக்ஷயா, ஜெய்ஷாரு, ஜெய்சாதுயன் ஆகியோரின் பேரனும் யாழினி, சஹானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரது நல்லடக்கம் இன்று (11.11.2014) காலை 9.00 மணிக்கு புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஜெனிபேட் (J.P)(மகன்)
0778736181

(8291)

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 - 04 - 1939 | ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியும் புகழ்பெற்ற விகடகவியுமான **முத்தையா திருநாவுக்கரசு** | 09 - 11 - 2014 |

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

அன்னாரின் பிரிவால் துயருறும்
சிறிராம் ஜுவல்லர்ஸ் மற்றும் கொனிக்கா நிறுவன ஸ்தாபனத்தினரும் ஊழியர்களும்

(சி-9030)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா...

இளம் விதவைகளும், பெற்றோரை இழந்த எண்ணற்ற குழந்தைகளும் ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர்.

இளைஞர்கள், பெண்கள், அன்றாடம் குடும்பம் நடத்த பணவசதி இன்றி வேலை இல்லாமல் தவித்து வருகின்றனர்.

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளும் கிடைக்கவில்லை. இந்தியா முன்வந்து வீடு கட்டித்தரும் திட்டத்தில் தகுதியானவர்களுக்கு வீடு கிடைப்பதில்லை.

அரசியல் செல்வாக்கு, ஆள்பலம் உள்ளவர்களுக்கு வீடு கிடைக்கிறது. இலங்கை அரசு எங்களை எல்லா விதத்திலும் இயங்க விடாமல் தடுக்கிறது. அதிகாரம் இல்லாமல் தான் நான் முதல் மந்திரியாக செயல்படுகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்டால்தான் நிரந்தர தீர்வு காண முடியும். இந்தியா இன்றி இப்பிரச்சினையில் தீர்வு காண முடியாது.

1987-ம் ஆண்டு ராஜிவ் -ஜெயவர்த்தன கொண்டு வந்த 13-வது திருத்த சட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்.

சமீபத்தில் ராஜபக்ஷவிடம் 13-வது சட்ட திருத்தத்தை இலங்கையில் நடைமுறையில் பிரதமர் மோடி கூறியது எங்களுக்கு ஆறுதலாக உள்ளது.

இலங்கை அரசுக்கு பல்வேறு தரப்பினரும் நெருக்கடி கொடுக்கும் போது தான் அவர்கள் சிலவற்றை நிறைவேற்றுகிறார்கள். இல்லையென்றால் எதையும் அவர்கள் கண்டு கொள்வதில்லை.

ஐந்து தமிழக மீனவர்களுக்கு இலங்கையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட சம்பவத்துக்கு தமிழ்நாட்டில் இருந்து ஒட்டு மொத்த எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

இந்திய அரசும் இலங்கையுடன் பேசி வருகிறது. சமீபத்தில் என்னை மீனவ குடும்பத்தினரும் சந்தித்து பேசினார்கள். அவர்களிடம் நாங்கள் கொடுத்த உறுதி மொழி என்னவென்றால் 1976-ம் ஆண்டில் இருந்து இலங்கையில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்றும். சட்டத்தில் அவ்வாறு கூறப்பட்டிருந்தாலும் அத்தகைய கடுமை எந்தவித நடவடிக்கையிலும் அரசு ஈடுபடவில்லை என்று கூறினேன்.

இதில் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு மரண தண்டனைக்கு பதில் நன்மைகளே கிடைக்க கூடும். இந்த வழக்கு கோர்ட்டில் இருப்பதால் அதிகமாக இதில் விமர்சிக்க முடியாது என்கிறேன்.

இலங்கை ஜனாதிபதி சொல்வது எதையும் உடனே செயல்படுத்துவது கிடையாது. 2009-ம் ஆண்டு இலங்கையில் போர் முடிந்ததும் வடமாகாண தேர்தலை நடத்தப்போவதாக கூறினார். ஆனால் அப்போது நடத்தவில்லை.

இந்த விஷயத்தில் இந்திய தலையிட்டு வலியுறுத்திய பிறகு தான் 2013-ம் ஆண்டு எங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. எனவே பிரதமர் மோடி அரசு இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாண்பட உதவ முடியும் என்று நம்பிக்கையில் இருக்கிறோம்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் எங்கள் வளர்ச்சி அதிகரித்து விடக்கூடாது என ஜனாதிபதி கருதுகிறார். இதற்காக சிங்கள குடியேற்றமும் அதிகம் நடைபெறுகிறது என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# பொருத்தமா...

ங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தாக்குதல் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஐ.நா விசாரணைக்கு எதிராக தொடர்ந்து பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வரும் இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பொருத்தமான முறையில் கண்டனம் வெளியிட்டுள்ளதாக தனது டுவிட்டர் பதிவில் ஜெனிவாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹாப்பர் வரவேற்றுள்ளார்.

அதேவேளை, ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை மௌனமாக்க இலங்கை முயற்சிப்பதாகவும், அது ஐ.நாவின் மீதான தாகுதல் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கீத் ஹாப்பர் கடந்த வாரம் டுவிட்டர் பதிவு ஒன்றில் எச்சரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

# நிறைவேற்று...

நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்புக்கு முன்னாள் ஜனாதிபதி அனுப்பியிருந்த விசேட செய்தியில் இதனை கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுறை என்பது அந்த அதிகாரங்களை கையாளும் நபருக்கு அமைய நன்மையானதாக அல்லது தீமையானதாக மாறக் கூடும் எனவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளரை தெரிவு செய்யும் அதேவேளை அந்த தேர்தலை சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்த எதிர்க்கட்சிகள் போராட வேண்டும் என இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (செ-11)

# மகிந்தவை...

களைத் தீர்த்துவைப்பதற்காக அரசுடன் ஒத்துழைத்துச் செயற்பட நாம் எப்போதுமே தயாராக இருந்தே வந்துள்ளோம்.

எமது மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்தும் வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும், மீள் குடியேற்றம் பற்றியும் தத்தமது பகுதிகளுக்கு எமது மக்கள் திரும்புவது குறித்தும் இராணுவமயப்படுத்தலைத் தவிர்ப்பது பற்றியெல்லாம் எப்போதுமே அரசுடன் பேசி ஒத்துழைத்து இணக்கத் தீர்வு காண நாம் தயாராகவே இருந்து வந்துள்ளோம்.

இவற்றுக்கு மேல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், அமைதித் தீர்வு காணுதல் போன்றவை தொடர்பிலும் அரசுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை காட்டிச் செயற்பட நாம் எப்போதுமே தயாராக இருந்து வந்துள்ளோம். அதற்கான எமது தற்துணிவை - பற்றுறுதியை - திடசங்கற்பத்தை - நாம் வெளிப்படுத்தியே வந்தோம்.

அதற்காக இந்த அரசுடன் நீண்ட காலமாக பல சுற்றுக்கள் பேச்சுக்களையும் நடத்தினோம். ஆனால் அரசுதான் ஒரு தலைப்பட்சமாக அந்தப் பேச்சுக்களில் இருந்து விலகிக் கொண்டது.

எனவே இந்த அரசுடன் நாம் ஒத்து

# இந்திய சிறை...

இலங்கைச் சிறையில் இருக்கும் தமிழக மீனவர்கள் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசி வழியாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதனையடுத்து மீனவர்களை இந்திய சிறைகளுக்கு மாற்றுவதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டபூர்வ நடவடிக்கைகள் விரைவில் தொடங்கும் என்றும் சுப்பிரமணிய சுவாமி தனது டுவிட்டரில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (செ-11)

# ம.மக்...

பிரதியமைச்சருமான வே.ராதாகிருஷ்ணன், சாந்திதேவி சந்திரசேகரன் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் (O/L), (A/L) மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கும் தொழில் புரிப வர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- M.Rajan 0772286054

VACANCIES
World Greatest Opportunity சாதாரண கல்வி கற்று வேலையின்றி தவிப்போருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் துடிப்பானவரா? விடா முயற்சியுடையவரா? தகுந்த பயிற்சியுடன் உள்வாங்கப்படுவார்.
- பயிற்சிக் காலத்தில் Fixed Income
- ஆரம்பம் - 12000/= பின் 40,000/=, 78,000/=
- வயதெல்லை 18 - 30
- ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.-
(8288)
அழைக்க - 0774458134

THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக
2880 DPI
Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)
NEW Photo Quality Printing
Jana Digital 0770731654
Photo Quality 40/=
Normal Quality 35/=
- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்
Light Board - 1Side - 450/= 2 Side - 500/=
Name Board - 1Side - 160/= 2Side - 230/= 1Side - 210/= 2Side - 320/=
3 வருட உத்தரவாதம்
Sticker Print 70/=
Backlit Print 70/=
(7849)
ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
021 221 3233, 077 073 1654

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பசுபதி ஸ்ரீபதி



யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் எழுதுவினைஞரும் பழைய மாணவியுமான செல்வி பசுபதி சாந்தீஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரர் அமரர் பசுபதி ஸ்ரீபதி அவர்களின் பிரிவுத் துயரால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கல்லூரியின் சமூகம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி (சி-9031)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்

# மரண அறிவித்தல்



## முத்தையா திருநாவுக்கரசு

**(J.P.U.M, ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி, பிரபல சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், கவிஞர் (விகடகவி)**

டச்சு றோட் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் 127/7A கோயில் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா திருநாவுக்கரசு 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டச்சு றோட் அளவெட்டியைச் சார்ந்த பரமு முத்தையா- செல்லாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், வேலணை மேற்கைச் சார்ந்த காலஞ்சென்ற திருநாவுக்கரசு - தர்மலட்சுமி தம்பதியரின் மருமகனும், மங்கையர்க்கரசி (ஓய்வுநிலை சங்கீத ஆசிரியை - இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்)யின் அன்புக் கணவரும், குமணன் (பொது வைத்திய நிபுணர் - யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை), கோகுலன் (பொறியியலாளர் பாரதி எயர்ரெல்), றமணன் (வைத்தியர் ராகம போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிந்துஜா, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், பூஜிதன், ஜனகன், ஜதுஷன், வினுஜன் ஆகியோரின் பேரனும், புவனேஸ்வரி, இராஜரத்தினம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபாலசுந்தரம், நகுலேஸ்வரி, இராஜரத்தினம், நவரத்தினம், சீவரத்தினம், மீனாம்பாள், ஜெயராணி, வரலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**Dr.தி.குமணன்**
(மகன்)

(8284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.